விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு + II
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-6763)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 13 வெள்ளிக்கிழமை (28.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 191

## கிளிநொச்சியில் ரக்ரருடன் மோ.சைக்கிள் விபத்து

### இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(பரந்தன்)

கிளிநொச்சியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் 27 வயதான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்து விபத்து நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து காக்கா கடைசந்தி ஊடாக 23

### குருநகரில் குடும்பத்தகராறு காரணமாக

## கணவனின் கத்திக்குத்துக்கு இலக்காகி 3 பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர்ப் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக கணவனின் கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகிய மனைவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் ராயூ பெலசியானா (வயது-45) என்ற 3 பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

குருநகர் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மு.ப 11.30 மணியளவில் இடம் 23

### அவசரகாலச் சட்டம்

## வாக்கெடுப்பின்றி நிறைவேறியது

(கொழும்பு)

அவசரகால சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் அவசரகால நிலைமையை மீண்டும் 23

## 3 வருடமாக இராணுவ முகாமில் பாலியல் அடிமையாக வைக்கப்பட்டிருந்தேன்

### கோத்தாவுக்கு எதிராக அமெரிக்காவில் தமிழ்ப் பெண்கள் உள்ளிட்ட 10 பேர் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

3 வருடமாக இராணுவ முகாமில் பாலியல் அடிமையாக வைக்கப்பட்டிருந்தேன் என கோத்தபாயவுக்கு எதிராக அமெரிக்காவில் தமிழ்ப் பெண் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். 23



தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை மேல் மாகாண வினாத்தாள் பகுதி-II உள்ளே →

### குற்றங்களுடன் தொடர்பில்லை எனில்

## பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு மைத்திரி, ரணில் ஏன் அச்சப்பட வேண்டும்

### ஜே.வி.பி., கேள்வி

(கொழும்பு)

தாம் எந்தவிதமான குற்றங்களுடனும் தொடர்பில்லை என்றால் மைத்திரி, ரணில், மகிந்த ராஜபக்ஷ ஏன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின்விசாரணைகளுக்கு அச்சப்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர். 23

### வீட்டிலிருந்தவர்களை தாக்கிவிட்டு

## 18 வயது யுவதி ஒருவர் சாவகச்சேரியில் கடத்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - சாரதா வீதிப் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நேற்று வியாழக்கிழமை இரவு 10 மணி யளவில் நுழைந்த கும்பல் வீட்டில் இருந்தவர்களைத் தாக்கிவிட்டு 18வயது யுவதி ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது

இதன்போது தாக்குதலுக்கு இலக்கான யுவதியின் 45 வயதான தாய் 23

### அபிவிருத்தி என்ற பெயரில்

## உரிமைகளை விட்டுக் கொடுக்க நாம் ஒருபோதும் தயாரில்லை


### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(திருகோணமலை)

அபிவிருத்தி என்ற பெயரில் உரிமைகளை விட்டுக்கொடுக்க நாம் ஒருபோதும் தயாராக இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை 23

## ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் பெருமளவு வெடி பொருட்கள்

### காத்தான்குடியில் மீட்பு



(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் ஐ.எஸ் பயங்கரவாதிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் 23

### தென்னாபிரிக்க ஜனாதிபதியுடன்

## பிரதமர் ரணில் சந்திப்பு



(கொழும்பு)

தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோஷா, நேற்று காலை இலங்கைக்கு குறுகிய நேரப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

ஜி20 மாநாட்டில் பங்கேற்பதற்காக, ஜப்பான் நோக்கி பயணித்த அவர், நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

தென்னாபிரிக்க விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானமொன்றில், காலை 10.20 மணியளவில், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவருடன், 20 பேர் அடங்கிய குழுவினரும் வருகை தந்திருந்தனர். தென்னாபிரிக்க ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினரை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் அர்ஜுன 23

### முல்லை சிவநகரில்

## புதையல் தோண்டிய பெண் உட்பட 14 பேர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவநகர் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவர் உட்பட 14 பேரை நேற்று அதிகாலை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து புதையல் தேடும் கருவி மற்றும் கமரா உள்ளிட்ட பொருட்களையும் மீட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிவநகர் பகுதியில் நேற்று அதிகாலை புதையல்தோண்டும் முயற்சியில் ஒரு குழுவினர் ஈடுபட்டதாக 23

# மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

சித்திரமேழி, இளவாலை பழனியாந்தன் சனசமூக நிலையத்தினால் வருடாவருடம் நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை கொத்துத்துறை சவாரித்திடலில் மாலை 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம)



# ஓமந்தையில் விபத்து ; ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா, ஓமந்தையில் வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். ஓமந்தையில் இருந்து பன்றிகெய்த குளம் நோக்கி சென்ற கப் ரக வாகனத்தை தனியார் பேருந்து முந்திச்சென்ற போது விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த கப் ரக வாகனசாரதியான 22 வயதுடைய விதுசன் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)


## கல்வி வளர்ச்சி அறக்கட்டளை-கிளிநொச்சி

### வெளிக்கள உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

எமது நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், அறிக்கைகளை பெறுதல் என்பனவற்றுக்காக வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர் தேவைப்படுகின்றார். தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும். ஆண்கள் மட்டும்.

**தகைமைகள்**

1. க.பொ.த உயர்தரம் சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. கணணி மற்றும் ஆங்கில அறிவு கட்டாயமானது.
3. மோட்டார் வண்டி சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் அவசியமானது.
4. ஏற்கனவே குறித்த துறைசார் அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
5. சம்பளம்/காலம் என்பன நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
6. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தாமாக தயாரித்த சுயவிபர படிவத்தினை 10.07.2019இற்கு முன்னர் எமக்கு நேரிலோ, பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கவும்

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி
கல்வி வளர்ச்சி அறக்கட்டளை
இல-82 A, கணேசபுரம் வீதி,
கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

செயலாளர்
கல்வி வளர்ச்சி,
அறக்கட்டளை - கிளிநொச்சி.

(C-6795)



# WORK PERMIT VISA

FRANCE | GERMANY | ITALY | POLAND

ஆகிய நாடுகளுக்கு விரைவாக (2மாதத்திற்குள்) விசா பெறுவதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும். ஆண் பெண் இரு பாலரும், கணவன் மனைவியாகவும் விண்ணப்பிக்கலாம்

**தகைமைகள்**

- வயது 21-55ற்கு மேற்பட்டவர்கள்
- கல்வி: க.பொ.த சாதாரண தர பரீட்சை
- 1 வருட தொழில் முன் அனுபவம்

**வேலைவாய்ப்புகள்**

*Welders, Cleaner, Room Boys, Cooks, Carpenter, General Labour,*



FRANCE | GERMAN | SWISS | ITALY

ஆகிய நாடுகளுக்கு விசா மறுக்கப்பட்டவர்களுக்கு விசா பெற்றுக்கொள்ளும் வசதிகள் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு:
சிவா: 076-018-1946

(C-475)



# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

உருவமாக
03
04
1926

ஒளியாக
08
07
2014



அமரர்
## சின்னட்டியன் பசுபதி

திதி : வளர்பிறை ஏகாதசி
28.06.2019

அன்பென்ற ஒற்றை வார்த்தையில்
எமை எல்லாம் ஆட்சி செய்த
எம் அன்பு அப்பாவே
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
இன்றும் நீர் எம்முடன் இருப்பதாக
உணர்கின்றோம் அப்பா
உழைப்பு என்பதன் அர்த்தம்
என்னவென எமக்கு புரியவைத்தீர்
கண்டிப்பை கண்ணில் வைத்து
அன்பை நெஞ்சில் கொண்டு எமை எல்லாம்
ஆளாக்கிய தெய்வம் ஒன்று எம்மை விட்டு
பிரிந்து ஐந்து ஆண்டுகள் கடந்ததுவோ?
ஐந்தல்ல ஐநூறு ஆண்டுகள் கடந்தாலும்
நீர் எங்கள் நெஞ்சில்
வாழ்ந்து கொண்டே இருப்பீர்

ஊரெழுகிழக்கு - குடும்பத்தினர்

(9400)

## அமரர் சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியம்
## நான்காம் ஆண்டு நிறைவு விழா

காலம் : 28.06.2019 வெள்ளி பகல் 11.30 மணி
இடம் : நாவலம்பதி ஞானவயிரவர் பொது நோக்கு மண்டபம்

தலைமை திரு.இ.இமயகரன் - ஆசிரியர் விசுவமடு மகாவித்தியாலயம்
பிரதமவிருந்தினர் கௌரவ விஜயகலா மகேஸ்வரன் - கல்வி இராஜாங்க அமைச்சர்
சிறப்பு விருந்தினர்கள் திருமதி சுபாஜினி மதியழகன் - பிரதேச செயலர் கோப்பாய்
திரு.ஆ.நித்திலவர்மன் - சிரேஷ்ட விரிவுரையாளர் கல்வித்துறை, யாழ் பல்கலைக்கழகம்
திரு.அ.பஞ்சலிங்கம் - ஓய்வுநிலை அதிபர் யாழ்.இந்துக்கல்லூரி
திரு.தி.வரதராஜன் - ஓய்வுநிலை நிர்வாகக் கிராம அலுவலர்
சிவஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்
செ.சுதர்சன் - கிராம உத்தியோகத்தர் ஊரெழு
நாவலம்பதி ஞானவயிரவர் ஆலய மூடகுரு

விருந்தினர்கள் உரையைத் தொடர்ந்து பாடசாலை, ஆலயம், சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு நிதி அன்பளிப்பு வழங்குவதுடன் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண பரீட்சை, பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்த கல்விச் சாதனையாளர்களுக்கு நிதி அன்பளிப்பு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வளர்பிறை,
ஊரெழு கிழக்கு.

அமரர் சின்னட்டியன்
பசுபதி ஞாபகார்த்த நிதியம்

# மரண தண்டனையை நிறைவேற்றும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்க

## மைத்திரியிடம் மன்னிப்புச்சபை மன்றாட்டம்



(கொழும்பு)

**போதைப்பொருள் கடத்தல் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கைதிகள் நால்வருக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் வழங்கியிருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏனைய நாடுகள் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் தாம் கடைப்பிடிக்கும் கொள்கைகளில் மறுசீரமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று உணரத் தொடங்கியிருப்பதுடன், மரண தண்டனையை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில் இலங்கை அதற்கு மாறாக செயற்படுகின்றது என்று சாடியிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, இது சர்வதேச நாடுகளின் மத்தியில் இலங்கைக்குக் காணப்படும் அங்கீகாரத்திற்குப் பெரும் பாதகமாக அமையும் என்பதுடன், ஜனாதிபதி மைத்திரி தனது தீர்மானத்தை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் கோரியது.**

மரண தண்டனைக் கைதிகள் வரிசையிலுள்ள நால்வருக்கு விரைவில் அத்தண்டனை அமுல்படுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார்.

போதைப்பொருள் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நால்வருக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவதற்குரிய அனுமதிப்பத்திரங்களில் தான் கையெழுத்திட்டு விட்டதாக ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் செய்தி ஆசிரியர்களுடன் நடத்திய விசேட சந்திப்பின் போது ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இத்தீர்மானம் தொடர்பில் கடும் அதிர்ச்சியை வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய நால்வருக்கு மரண தண்டனையை அமுல்படுத்தப்போவதை ஜனாதிபதி உறுதி செய்திருக்கின்ற போதிலும் மரண தண்டனையை எதிர்கொண்டிருக்கும் நபர்கள், அவர்கள் தொடர்புபட்டுள்ள குற்றச்செயல்கள் குறித்த எந்த விபரங்களும் வெளியிடப்படவில்லை.

இந்தத் தகவல்கள் வெளியிடப்படாமல் இருப்பதால் குறித்த மரண தண்டனைக் கைதிகள் கருணைமனுவிற்கு விண்ணப்பிக்கவோ அல்லது இதிலிருந்து மீள்வதற்கோ வாய்ப்பில்லாத நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

அந்த நான்கு கைதிகள் அல்லது அவர்களின் குடும்பத்தினருக்கு இவ்விடயம் குறித்து அறிவிக்கப்பட்டமை தொடர்பில் இது வரையில் எவ்வித உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களும் இல்லை என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இலங்கையில் கடந்த 1976 ஆம் ஆண்டின் பின்னர் மரண தண்டனை நிறைவேற்றப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகவே அமையும்.

43 வருடகாலத்தின் பின்னர் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் அளித்து ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளமை தொடர்பில் நாம் வெறுப்படைகின்றோம்.

மிகக் கொடூரமானதும் மனிதாபிமானமற்றதும் இழிவானதுமான இந்தத் தண்டனையை அமுல்படுத்துவதன் ஊடாக நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முற்றுப்புள்ளி வைக்கின்றார் என சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் பிராஜ்பட்நாய்க் விசனம் வெளியிட்டார். (இ-7)

# சு.கவைச் சேர்ந்தவரே ஜனாதிபதி வேட்பாளர்

## தயாசிறி திட்டவட்டம்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தே தெரிவு செய்யப்பட வேண்டும் என்று கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் ஜனாதிப்பதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் சகல சுதந்திர கட்சி உறுப்பினர்களும், முக்கிய பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது. இவ்வாறு தேர்தல்கள் தொடர்பான கலந்துரையாடலின் போது ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரே வேட்பாளராகக் களமிறக்கப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட யோசனை நிறைவேற்றப்பட்டது.

குறித்த வேட்பாளர் யார் என்று பெயர் குறிப்பிடப்படவில்லை. எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே மீண்டும் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பம் என்று ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டதாக தயாசிறி ஜெயசேகர மேலும் தெரிவித்தார்.

அத்தோடு புதன்கிழமை பொதுஜன பெரமுனவுடனான கூட்டணி தொடர்பில் இடம்பெற்ற ஆறாம் சுற்று பேச்சுவார்த்தை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது இருதரப்பு கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கு விஷேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தலை இலக்காகக்கொண்டு சில கட்சிகள் பிரிவினைவாதத்தைத் தூண்டுகின்றன- முஜிபுர்



(கொழும்பு)

தேர்தலை இலக்காகக் கொண்டு சில கட்சிகள் முஸ்லிம் மற்றும் சிங்கள இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கின்றன என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டினார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதம் நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளதாக தற்போது அனைத்து தரப்பினரும் கூறி வந்தாலும் அதனால் அதிகம் பாதிக்கப்படுவது முஸ்லிம் சமூகமே.

அவசரகாலச் சட்டம் கூடுதலாக இனரீதியாகவே முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக சிறு சிறு ஆயுதங்களை வைத்திருந்தவர்களே அதிகளவில் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் இனரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்தியவர்கள், சிங்கள - முஸ்லிம் மக்களிடையே பிரிவினைவாதத்தைத் தூண்டும் விதமாக கருத்து தெரிவித்தவர்கள் மீது இச் சட்டம் பாயவில்லை.

அவர்கள் எல்லோரும் தற்போது நாட்டில் சுதந்திரமாக உலாவி வருகின்றனர். அவர்களுக்கு எதிராக அவசரகால சட்டம் பயன்படுத்தப்படுவதில்லை. ஒரு தரப்பினருக்கு மாத்திரமே அச்சட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

அத்தோடு சில அரசியல் கட்சிகள் முஸ்லிம்கள் மீது இவ்வாறு இனரீதியாக முரண்பாடுகளை ஏற்படுத்தி அடுத்த தேர்தலுக்கான காய்நகர்த்தலை மேற்கொள்கின்றன. தேர்தல் நடக்கும் வரை எமது சமூகம்தான் பலிக்கடா ஆக்கப்படுகின்றது.

எனவே தற்போது நாட்டிலுள்ள பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும். அது தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் என பாகுபாடு இருக்கக்கூடாது. சட்டம் சகலருக்கும் சமமானதே" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முஸ்லிம் அடிப்படைவாதம் தொடர்பாக சாட்சியமளிக்க சந்தர்ப்பம் தாருங்கள்

## பொதுபல சேனா கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சாட்சியம் வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு, பொதுபல சேனா கோரிக்கை விடுத்தது.

முஸ்லிம் அடிப்படைவாதம் குறித்த பல்வேறு விபரங்கள் தங்களிடம் உள்ளதால் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

ஏற்கனவே இந்த விடயங்கள் குறித்து பல சந்தர்ப்பங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான விபரங்களை வழங்குவதற்காக குறித்த தெரிவுக்குழுவில் முன்னிலையாக எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இன்று கூடவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் சாட்சி வழங்கவுள்ளார். அத்தோடு முன்னாள் அமைச்சர் அப்துல் ஹலீமின் சகோதரர் பாயிஸ் எம் ஹலீமும் சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்டார்.

அவர்களுடன், மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் குறித்து கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா வழங்கிய சாட்சியின் அடிப்படையில், மத்திய வங்கி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு சபை ஆகியவற்றின் அதிகாரிகள் சிலரும் சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்டுள்ளனர். (இ-7)




# 'அஞ்சாத இந்தியா' ஐந்தாவது வெற்றி

## ஷமி வேகத்தில் பணிந்தது மே.தீவுகள்


அரைச்சதமடித்த இந்திய அணித் தலைவர் ஹோலியின் அதிரடிகளில் ஒன்று

உலக கிண்ண லீக் போட்டியில் இந்திய அணி ஐந்தாவது வெற்றி பெற்றது. நேற்று நடந்த லீக் போட்டியில் 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மே.தீவுகளை வீழ்த்தியது. ஹோலி, தோனி அரைசதம் விளாசினர். 'வேகத்தில்' மிரட்டிய ஷமி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இங்கிலாந்தில் 12வது உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. மான்செஸ்டரின் ஓல்ட் டிரபோர்ட் மைதானத்தில் நேற்று நடந்த லீக் சுற்றில் இந்தியா, மே.தீவுகள் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ஹோலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**ஹோலி அரைசதம்**

இந்திய அணிக்கு ரோகித் சர்மா, லோகேஷ் ராகுல் ஜோடி நிதான ஆரம்பம் கொடுத்தது. ரோகித் (18) சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழந்தார். 48 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த ராகுல், அரைசத வாய்ப்பை இழந்து திரும்பினார். நான்காவது இடத்தில் களமிறங்கிய விஜய் சங்கர் இம்முறை சுதாகரித்துக் கொள்வார் என நம்பப்பட்டது. மாறாக இவர் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். கேதர் ஜாதவும் (7) வந்த வேகத்தில் திரும்பினார்.

ஹோலி இத்தொடரில் தொடர்ந்து நான்காவது முறையாக அரைசதம் எட்டினார். இவர், இம்முறை 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கடைசி நேரத்தில் தோனி, பாண்ட்யா இணைந்து 6வது விக்கெட்டுக்கு 70 ஓட்டங்கள் எடுத்தனர்.

இந்நிலையில் பாண்ட்யா (46) 'பெவிலியன்' திரும்ப, மொஹமட் ஷமி 'டக்' அவுட்டானார். கடைசி ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி என 16 ஓட்டங்கள் விளாசிய தோனி, ஒருநாள் அரங்கில் 72வது அரைசதம் எட்டினார். இந்திய அணி 50 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களை எடுத்தது. தோனி (56), குல்தீப் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஷமி நம்பிக்கை**

மே.தீவுகள் அணிக்கு கெய்ல், அம்ரிஸ் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. இந்தியாவின் மொஹமட் ஷமி, பும்ரா துல்லியமாக வீசினர். இதனால் ஓட்டங்கள் சேர்க்கத் திணறிய கெய்ல் (6), ஷமி வேகத்தில் அவுட்டானார். மீண்டும் மிரட்டிய ஷமி, ஹோப்பை (5) போல்டாக்கினார்.


அம்ரிஸ் (31), பூரன் (28), அணித் தலைவர் ஹோல்டர் (6) நீடிக்கவில்லை. பும்ரா வீசிய 27 வது ஓவரின் முதல் இரண்டு பந்தில் பிராத்வைட் (1), ஆலன் (0) சிக்கினர். ஹெட்மயர் 18 ஓட்டங்கள் எடுத் தார். காட்ரெல் 10, தோமஸ் 6 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, மே.தீவுகள் அணி 34.2 ஓவரில் 143 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்திய அணி 125 ஓட்டங்களால் இமாலய வெற்றி பெற்றது.

**'நம்பர் 1' அணித் தலைவர்**

அந்நிய மண்ணில் தொடர்ச்சியாக 10 ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் இந்திய அணித் தலைவர் என்ற பெருமை பெற்றார் ஹோலி. அவுஸ்திரேலியா (2), நியூசிலாந்து (3) மண்ணில் 5 வெற்றி, இங்கிலாந்தில் தற்போது 5 என மொத்தம் ஹோலி தலைமையில் இந்தியா 10 வெற்றிகளை தொடர்ந்து பெற்றது.

◈ ஆசிய மண்ணுக்கு வெளியே தொடர்ந்து 10 ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் இந்திய அணித் தலைவர் என்ற பெருமையும் பெற்றார் ஹோலி.

# ஜேசன் ரோய் 'ரெடி'


ஜேசன் ரோய்

இந்தியாவுக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டிக்கு முன், இங்கிலாந்து வீரர் ஜேசன் ரோய் முழு உடற்தகுதி பெற்றுவிடுவார் என, அந்நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

சமீபத்தில், சவுத்தாம்ப்டனில் நடந்த மே.தீவுகள் அணிக்கு எதிரான உலகக் கிண்ண கிரிக்கெட் லீக் போட்டியின் போது இங்கிலாந்து அணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜேசன் ரோய்க்கு, தொடையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டது.

இதனால் இவர், ஆப்கானிஸ்தான், இலங்கை, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடவில்லை. தற்போது காயத்தில் இருந்து மீண்டு வரும் இவர், வலைப்பயிற்சியை ஆரம்பித்து உள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு இன்னும் 2 போட்டிகள் (ஜூன் 30ல் இந்தியா மற்றும் ஜூலை 3ல் நியூசிலாந்து) மீதமுள்ளன. இவர், இந்தியாவுக்கு எதிரான லீக் போட்டிக்கு முன், 100 சதவீத உடற்தகுதி பெற்று விடுவார் எனக் கூறப்படுகிறது.

இதுகுறித்து இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், "ஜேசன் ரோய் காயத்தில் இருந்து தேறி வருகிறார். விரைவில் பூரண குணமடைந்து, முழு உடற்தகுதி பெற்றுவிடுவார். இவரது காயத்தை தீவிரமாக கண்காணித்து வருகிறோம். வலைப்பயிற்சி மற்றும் 'களத்தடுப்பு' பயிற்சியில் ஈடுபட்டு வரும் இவர், இந்தியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடுவார் என எதிர்பார்க்கிறோம்," என, தெரிவிக்கப்பட்டிருந்தது.

# அருவிபோல பாயுமா இலங்கை?

## இன்று தென்னாபிரிக்காவுடன் மோதல்


பயிற்சியின்போது மத்யூஸ்

இலங்கை அணிக்கு எதிரான இன்றைய உலக கிண்ண கிரிக்கெட் லீக் போட்டியில் தென்னாபிரிக்கா ஆறுதல் வெற்றி பெறுமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து மண்ணில் உலக கிண்ண கிரிக்கெட் நடக்கிறது. இன்று நடக்கவுள்ள லீக் போட்டியில் இலங்கை, தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன.

இலங்கை அணி இதுவரை ஆறு போட்டிகளில் இரண்டு வெற்றி மட்டுமே பெற்றுள்ளது. ஆனால், இங்கிலாந்து அணியை வீழ்த்தியதால் அரையிறுதி வாய்ப்புக்கான போட்டியில் இணைந்துள்ளது. முன்னாள் சம்பியனான இவர்கள், ராசியான புதிய மஞ்சள் நிற 'ஜெர்சி'யுடன் களமிறங்க உள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அரைசதம் அடித்த அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, குசல் பெரேரா ஜோடி இன்று ம ஜொலிக்கலாம். கடந்த முறை பெர்னாண்டோ, மத்யூஸ் உள்ளிட்டோர் 'மிடில் ஓர்டரை' பலப்படுத்தினர்.

'சீனியர்' வேகப் பந்துவீச்சாளர் மலிங்க அசத்துகிறார். கடந்த போட்டியில் நான்கு விக்கெட் வீழ்த்திய 'யோர்க்கர் கிங்'கான இவர் மீண்டும் மிரட்டலாம். இவருக்கு உடான, நுவன் பிரதீப் பங்களிப்பு தேவை.

**சோதிக்கும் அம்லா**

தென்னாபிரிக்க அணி அடுத்த சுற்று வாய்ப்பை ஏற்கனவே இழந்துவிட்டது. அம்லா இம்முறை சோதிக்கிறார். 6 போட்டிகளில் 123 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார். இரண்டு அரை சதம் அடித்துள்ள குயின்ரன் நம்பிக்கை அளிக்கிறார். அணித் தலைவர் டுபிளசி, மில்லர் உள்ளிட்ட நட்சத்திரங்கள் இருந்தாலும், துடுப்பாட்ட சரிவிலிருந்து மீண்டு வர தடுமாறுவது சோகம்தான்.




பாராட்டி வாழ்த்துகின்றோம்

இந்தியா, தமிழ்நாடு Dr.M.G.R மருத்துவ பல்கலைக்கழகம் இன்று 28.06.2019 வெள்ளிக்கிழமை **சித்த மருத்துவ பேரறிஞர்** என்னும் பட்டத்தை வழங்கி

திரு.

**சோ.கனகசுந்தரம்**

-அவர்களை-

கௌரவிக்கின்றது

இவ்வேளையில் அவரை நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்:*

**ஆ.விஜயராம் J.P**


ஆத்தியடி, பருத்தித்துறை.

(C-6797)




# தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தமிழின கட்சிகள் ஒன்று சேரத் தீர்மானம்

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



(கொழும்பு)

கட்சிக் கோட்பாடுகளை, சற்றுத் தள்ளிவைத்துவிட்டு தமிழினத்தின் கட்சிகள், தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வோடு, ஒன்று சேர இருக்கின்றோம் என விசேட பிராந்தியங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நாட்டில் வாழும் தமிழினத்தின் பிரச்சினைகள் தீர்வின்றி கிடப்பில் கிடக்கின்றன. அவைகளின் தீர்வுகளுக்கு நிதானத்தோடு கூடிய வேகம் அவசியம். அதற்காகவே தமிழினத்தின் கட்சிகள் தேசியப் பிரச்சினைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வோடு ஒன்று சேர இருக்கிறோம். அது காலத்தின் தேவை. அதற்கான இறுதிவடிவம் இன்னும் ஓரிரு வாரங்களில் கிடைத்துவிடும் எனவும் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கட்சிகளும், அதனூடான மக்கள் பிரதிநிதிகளும் மக்களுடைய தேவைகளை இனம் கண்டு, அவைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய பாரியதொரு கடப்பாட்டை கொண்டிருக்கின்றன. ஆகையால் அவைகளை தீர்த்து வைக்க வேண்டிய உபாயங்களை நாமே உருவாக்க வேண்டும்.

இப்போது தமிழ்மக்கள், வடக்கு, கிழக்கு, மகாணங்களிலும், மலையகத்திலும் செறிந்தும், மற்றைய இடங்களில் பரவலாகவும் வாழ்கிறார்கள்.

தமிழர்கள் இந்த நாட்டில் ஒரு தேசிய இனம். அவர்களுடைய பாரிய பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாமல் இருக்கின்றபோது, புதிது புதிதாக பிரச்சினைகள் முளைத்த வண்ணம் இருக்கின்றன.

நாம் கொஞ்சம் அசந்து விட்டால், மற்றைய இனங்கள் நமது இருப்பையே இல்லாமற் செய்து விட முனைவதை நாம் கண்ணூடாக கண்டுவருகிறோம்.

இந்த அரசோ பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக அவைகளை சாட்டுப் போக்குச் சொல்லி காலத்தை நீடித்து தனது சிம்மாசனத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

ஒரு பிரதேசத்தின் நிர்வாக அலகான பிரதேச செயலகத்திற்கு அந்தஸ்தை வழங்க 30 வருடகாலம் கடந்தும் முடிந்தபாடில்லை. இதனை நாம் தமிழர்களுடைய தேசியப்பிரச்சினையாக பார்க்கிறோம்.

மலைநாட்டு மக்களுடைய அதிகரிக்கப்பட்ட சம்பளம் நாளொன்றுக்கு 50 ரூபா வீதம் இன்னும் வழங்கப்படாதிருக்கின்றது. இத்தனைக்கும் இந்த அரசின் இருப்பை தக்கவைத்தவர்கள் தமிழ்ப்பிரதிநிதிகள். எங்கேயோ தவறிருக்கிறது. சரியான உபாயம் தேவைப்படுகிறது. இதுவே உண்மை.

சில வேளைகளில் எம்மிடையேயுள்ள அரசியல் பிரச்சினைகளை மையமாக வைத்து இன்னொரு தரப்பினர் எமக்குள்ளே மூக்கை நுழைத்து விடுகிறார்கள். இது ஒரு நல்ல சகுனமல்ல.

தேர்தல்காலம் வரும்போது மட்டும்நமது பிரதிநிதிகளைத்தெரிவு செய்ய நமது அரசியல் கட்சிகளை பயன்படுத்துவோம். அதற்கு அப்பால் உள்ள தேசியப் பிரச்சினைக்கு தமிழ்க்கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்.

இதற்கான பேச்சுவார்த்தைகள் மிகவும் ஆரோக்கியமாக இடம்பெற்று இறுதி வடிவத்தை அடைந்துவிட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாடசாலை மதில்சுவர் விழுந்ததில் தொழிலாளர்கள் இருவர் உயிரிழப்பு

(ரக்வானை)

ரக்வானை-பொதுப்பிட்டிய மகா வித்தியாலயத்தின் மதில்சுவர் சரிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்தனர்.

குறித்த பாடசாலையில் நேற்றுக் காலை நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்தனர்.

அத்தோடு மேலும் இரு தொழிலாளர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (இ-7)

# சதாசகாய அன்னை ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் புனித சதாசகாய ஆலயத் திருவிழா கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதில் நாளை 29 ஆம் திகதி மாலை 5 மணியளவில் திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். (இ-7)

# நெடுக்குளம் வீதியை மூடுவதை நிறுத்த மனித உரிமை ஆணைக்குழு பரிந்துரை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட நெடுக்குளம் 505 ஆவது வீதியை மூடும் தீர்மானத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகம் பரிந்துரை செய்தது.

யாழ்.கொழும்புத்துறை நெடுக்குளம் பகுதியில் உள்ள குறித்த வீதியைப் பல வருடகாலமாக பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் கடந்த மூன்று வருடத்திற்கு முன்னர் யாழ்.மாநகர சபை குறித்த வீதியை மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி புனரமைத்ததாகவும் பின்னர் யாரோ ஒருவருடைய அழுத்தத்தின் காரணாக குறித்த வீதி தனியார் ஒருவருடைய காணியை ஊடறுப்பதாகத் தெரிவித்து நகர திட்டமிடல் அமைச்சின் அனுமதியுடன் மூடுவதற்கான நடவடிக்கை நேற்று எடுக்கப்பட்டது.

குறித்த வீதியைப் பயன்படுத்தும் இரு பகுதி மக்களும் தமது சொந்தக் காணியை விடுவித்தே குறித்த வீதியை அகலிப்பதற்கு வழங்கிய போதும் மாநகர சபை மூட நினைப்பது அப்பகுதி மக்களின் உரிமையைப் பறிக்கும் செயலாகும்.

இது தொடர்பில் இலங்கை அலுவலகத்தில் அப்பகுதி மக்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த வீதி தொடர்பான விசாரணை முடியும் வரை யாழ். மாநகர சபை குறித்த வீதி தொடர்பான நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்குமாறு ஆணைக் குழு பரிந்துரைத்தது. (இ-10)

# புகையிரத சேவை அத்தியாவசிய சேவையாக நேற்றுப் பிரகடனம்

(கொழும்பு)

புகையிரத சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்து அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கையொப்பத்துடன் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

புகையிரத சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்யவுள்ளதாக பிரதியமைச்சர் அசோக அபேசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார். இந்நிலையில் நேற்று குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டது. (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மேடம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்:** நண்பர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய் தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அதிர்ஷ்டகரமான வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்.

**சிம்மம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** பொது வாழ்வில் புகழ்கூடும் நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது கவனம் தேவை.

| | | | |
|---|---|---|---|
| | சந் | சுக் | சூரி, புத, ராகு |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி | | செவ் |
| | | | |
| சனி, கேது | குரு | | |

**28.06.2019**

ஆனி 13, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

ஏகாதசி பின்னிரவு 4.59 மணிவரை

அச்சுவினி முற்பகல் 7.43 மணிவரை

சுபநேரம் 5.55-7.25 மணிவரை

இராகுகாலம் 10.25-11.55 மணிவரை

ஸ்மார்த்த ஏகாதசி விரதம்,

அமிர்தசித்தம்

வளவன்

# பாடசாலைகள் குறித்து ஆளுநர் செயலணிக்கு அதிக முறைப்பாடுகள்

வடமாகாணப் பாடசாலைகளில் இடம்பெற்ற, இடம்பெறும் நிர்வாக ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் விசேட செயலணிக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக வடமாகாண ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் என வடக்கிலுள்ள சகல மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகவும் இது தொடர்பில் ஆளுநர் விசேட கவனம் செலுத்தி வருவதாகவும் ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-10)

# புகையிலை சார் உற்பத்திகள் இன்று விற்பனை இல்லை

(யாழ்ப்பாணம்)

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையினர் இன்று வெள்ளிக்கிழமை தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புகையிலை சார் உற்பத்திப் பொருட்களைத் தடை செய்துள்ளனர். இன்று சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட எந்தவொரு வர்த்த நிலையத்திலும் புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது எனவும் இதற்கு வர்த்தகர்களும் பூரண ஆதரவு வழங்கியிருப்பதாகவும் சாவகச்சேரி நகரசபையினர் தெரிவித்துள்ளனர். (5-30)

# நான்காம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

அமரர் சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழா இன்று 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஊரெழு நாவலம்பதி ஞான வைரவர் திருக்கோவில் பொதுநோக்கு மண்டபத்தில் ஆசிரியர் இ.இமயகரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் திருமதி. சுபாஜினி மதியழகன், யாழ். கல்கலைக்கழக கல்வித் துறை விரிவுரையாளர் ஆ.நித் தியவர் மன், ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் தி.வரதராஜன், யாழ். இந்துக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் அ.பஞ்சலிங்கம், உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ.அருணந்தி சிவம் ஆகியோர் கலந்து கொள்வர். (5-134)

# சாவகச்சேரி பிரதேச சபையில் 300 துவிச்சக்கரவண்டிகளே பதிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட துவிச்சக்கரவண்டிகள் உள்ள போதிலும் சபையின் ஆறு உப அலுவலகங்களிலும் 300 இற்கு உட்பட்ட இலக்கத் தகடுகளே பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சபையின் உத்தேச வரவு-செலவுத் திட்டத்தில் கணிசமான தொகை துவிச்சக்கரவண்டி வருமானமாகக்காட்டப்படுகிறது.

மிகக் குறைந்தளவு இலக்கத் தகடுகளே பதிவு செய்யப்படுவதால் பொது அறிவித்தல் மூலம் விளம்பரம் செய்து ஒரு மாத கால அவகாசம் கொடுத்து இலக்கத் தகடுகள் பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்களை கோர வேண்டும் என கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சாவகச்சேரி பிரதேச சபை அமர்வில் உறுப்பினர் கு.குகானந்தன் முன்மொழிந்தார்.

இதற்கு கால அவகாசம் வழங்கி அடுத்த கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்படுமென செயலாளர் தெரிவித்தார். (5)

# இலங்கையில் 5-ஜி இன்னும் அறிமுகமாகவில்லை

## மக்கள் நலனில் அக்கறையாகவே உள்ளேன்–ஆனல்ட்

இலங்கையில் 5-ஜி தொழில்நுட்பம் இதுவரை அறிமுகப்படுத்தப்படாதுள்ள போது எவ்வாறு யாழ்.மாநகரசபையால் மட்டும் அறிமுகப்படுத்த முடியுமென யாழ். மாநகர முதல்வர் இ.ஆனல்ட் கேள்வி எழுப்பினார்.

உலக நாடுகள் பலவற்றில் 5-ஜி தொழில்நுட்பம் சம்பந்தமாகப் பல வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வரும் நிலையில் யாழ். மாநகர சபை மட்டும் மக்கள் நலனைப் பற்றிச் சிந்திக்காமல் தான்தோன்றித்தனமாக குறித்த தொழில்நுட்பத்தை பிரயோகிக்க மாட்டாது.


யாழ். மாநகரத்தை அழகுபடுத்தும் நோக்கில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தா வண்ணம் தகவல் தொடர்பாடல் சேவைகளை விரைவுபடுத்தும் நோக்கில் யாழ்.மாநகர சபையின் அனுமதியுடன் ஸ்மாட் செல்லூடர் கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மின்னல் தாக்கங்களில் இருந்து மாநகரத்தைப் பாதுகாக்கும் இடிதாங்கி,மின்தாங்கி,மின் விளக்குகள்,வீதிக் கண்காணிப்புக் கமராக்கள் மற்றும் நவீன விளம்பர ஒளிபரப்புக் கருவி ஆகியவற்றை கொண்டமைந்ததாக குறித்த கோபுரங்கள் அமையப் பெறும் எனவும் காலத்தின் தேவை கருதி வளர்முக நாடுகளில் 5-ஜி தொழில்நுட்பம் அமுல்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கை மட்டும் அதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கறுப்பு நிறமாக மாறும் குடிநீர்க் கிணறு

கரவெட்டி துன்னாலைக் குடவத்தை ஜே/370 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள குடிநீர் கிணற்றின் நீர் கறுப்பு நிறமாகக் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட குடவத்தைக் கிராமம் 70 இற்கு மேற்பட்ட குடியிருப்புக்களைக் கொண்ட அடிப்படை வசதிகளற்ற கிராமமாகக் காணப்படுகின்றது.



இக் கிராம மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் ஒரே ஒரு கிணறாகக் காணப்படும் குடவத்தை பிள்ளையார் கோயில் வயல் கிணற்று நீர் தற்போது கறுப்பு நிற நீராகக் காணப்படுகின்றது.

ஆகவே பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான சுத்தமான நீரைப் பெற்றுக் கொடுப்பது அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் கடமையாகும். எனவே சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.(5-10-60)

# வாய்த்தர்க்கத்தால் வாள் வெட்டு

உறவு முறையான அயல் வீட்டுக்காரர் வீடு புகுந்து வெட்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் பாலாவி தெற்கில் இடம்பெற்றது.

ஏற்கனவே இருந்த சிறு பிரச்சினை காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினால் வீடு புகுந்து வெட்டியதில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலாவி தெற்கைச் சேர்ந்த மார்க்கண்டேயன் சிவானந்தன் வயது 35 என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-114)

# தொழிற் பயிற்சி கற்கைநெறிகள் ஜூலை இரண்டாம் திகதி ஆரம்பம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்.மாவட்டத்தில் தற்கால வேலை வாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதி நேர தொழிற் பயிற்சிக் கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. இதன் யாழ்.மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், காரைநகர், கைதடி, பண்டத்தரிப்பு, சுன்னாகம் மற்றும் வல்வெட்டித்துறை தொழிற் பயிற்சி நிலையங்களில் கற்கைநெறிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. இவை மூன்று மற்றும் ஆறு மாதங்கள் பயிற்சிக் காலத்தை கொண்டன.

இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-3/4 (NVQ-3/4) சான்றிதழ்க்கான பயிற்சிகளாகும். இக் கற்கைநெறிகளை முழுமையாகப் பூர்த்தி செய்து NVQ சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் அனைவருக்குமான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இக் கற்கைநெறிகளைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம்,4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949/077 716 1955/071 031 8737/ 071 079 6440/0710318865 அல்லது காரைநகர் (021 221 1793/071 031 8862), கைதடி (021 223 2592/071 038 863), சுன்னாகம் (021 224 1851/076 686 7018), பண்டத்தரிப்பு (077 618 4752), வல்வெட்டித்துறை (021 226 2550/071 031 8864) ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, யாழ்ப்பாண உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (5)




# 'விபூதி யோகம்' விளக்கவுரை

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதூசானந்தா வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தும் பகவத் கீதை விளக்கவுரையில் நாளை மறுதினம் 30 ஆம் திகதி காலை 7.45 மணி முதல் காலை 8.45 மணிவரை நல்லூர், செட்டித்தெரு சின்மயா மிஷனில் பகவத் கீதையின் 10 ஆம் அத்தியாயமாகிய "விபூதி யோகம்" விளக்கவுரை இடம்பெறவுள்ளது. (5)

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு



போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு இவ் வாரம் யாழ். வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம் மற்றும் புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயத்திலும் இடம்பெற்றது.

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கேற்ப யாழ்மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஒழுங்குபடுத்தலில் வேலணைப் பிரதேச செயலகமும் ஊர்காவற்றுறைப் பொலிஸ் சிறுவர், பெண்கள் பிரிவும் சி.சி.எச் நிறுவனம் இணைந்து இவ் விழிப்புணர்வு நிகழ்வை நடத்தியிருந்தன. (5-10)

# மரணதண்டனை மீண்டும் அமுல்படுத்தப்பட்டால் இலங்கையுடனான ஒத்துழைப்பைக் கடினமாக்கும்

## பிரித்தானியா எச்சரிக்கை

(கொழும்பு)

**மரணதண்டனை மீண்டும் நடைமுறைப்படுத்தப் பட்டால், தீவிரவாத முறியடிப்பு உள்ளிட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விவகாரங்களில் இலங்கையுடனான ஒத்துழைப்பைக் கடினமாக்கும் என்று பிரித்தானியா எச்சரித்தது.**

பிரித்தானிய வெளி விவகாரப் பணியக பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

"மரணதண்டனை நடைமுறைப்படுத்தப்பட்டால், பொலிஸ்துறை, பாதுகாப்பு மற்றும் பிற பாதுகாப்பு விவகாரங்களுடன் தொடர்புடைய தொழில்நுட்ப உதவித் திட்டங்களைப் பிரித்தானியா மறுபரிசீலனை செய்யும்.

மரணதண்டனையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தனது நீண்ட கால தடையை இலங்கை கைவிட விரும்புகிறது என்ற தகவல்கள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

மரணதண்டனையை அனைத்துச் சூழ்நிலைகளிலும் கொள்கை விவகாரமாக பயன்படுத்துவதைப் பிரித்தானியா எதிர்க்கிறது.

ஆறு மாதங்களுக்கு முன்னர், ஐ.நா. பொதுச் சபையில் மரண தண்டனைக்கு எதிரான உலகளாவிய தடைக்கு ஆதரவாக இலங்கை வாக்களித்தது.

இந்தக் கொள்கையை மாற்றியமைப்பது ஒரு பிற்போக்கு நடவடிக்கையாகும்.

இது இலங்கையின் அனைத்துலக நிலை மற்றும் சுற்றுலாத்தலமாகவும், வணிகத்திற்கான வளர்ந்து வரும் மையமாகவும் காணப்படும் அதன் நற்பெயருக்கும் தீங்கு விளைவிக்கும்.

இலங்கை அரசாங்க உயர் மட்டங்களிடம் நாங்கள் எமது கவலைகளை எழுப்பியுள்ளோம்.

மரண தண்டனை தொடர்பான தடையைத் தொடர்ந்து பின்பற்றுமாறு இலங்கைக்கு அழைப்பு விடுக்கின்றோம் என்றும் பிரித்தானியா தெரிவித்தது. (இ-7)


## முகவர்கள் தேவை

யாழில் நீண்ட காலமாக நன்மதிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் கூரியர் சேவை நிறுவனத்திற்கு முகவர்கள் கீழ்வரும் நகரங்களில் நம்பிக்கையும் நேர்மையுமுள்ள தனிநபர்/வியாபார நிறுவனங்கள் தேவை.

- பளை
- கைதடி
- கோண்டாவில்
- உரும்பிராய்
- மருதனார்மடம்
- மானிப்பாய்
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- அச்சுவேலி
- புத்தூர்

கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள் மற்றும் வியாபார ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும்.

(9335) தொடர்புக்கு: 071 867 6424


# மரணதண்டனை தொடர்பாக இன்னும் அறிவிக்கப்படவில்லை

மரண தண்டனையை நிறைவேற்றுவது சம்பந்தமாக இதுவரை அறிவிக்கப்படவில்லை என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

அவ்வாறு அறி விக்கப்பட்டால் எந்தவொரு சந்தர்ப்பத் திலும் அதனை நிறை வேற்றுவதற்கு தயார் நிலையில் இருப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜே.டபி ள்யூ. தென்னகோன் தெரிவித்தார்.

நான்கு போதைப் பொருள் குற்றவாளிக ளுக்கு மரண தண்டனை வழங்குவதற் காக தான் கையொப்பம் இட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இது தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்றும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனை நிறைவேற்றுவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தயார் நிலையில் இருப்பதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற
- பில்லி சூனியங்கள் அகற்ற வேண்டுமா?

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153, 076 841 1848

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# 1119 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கி வைத்தார் பிரதமர்

(திருமலை)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிவந்த 1119 ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம் பெற்றது.



இந்த நிகழ்வு நேற்று (வியாழக் கிழமை) திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் ரணில், வடக்கு மாகாணத்தில் 378 தொண்டர் ஆசிரியர்களுக்கும்கிழக்கு மாகாணத்தில் 739 தொண்டர் ஆசிரியர்களுக்குமான நிரந்தர நியமனங்களை வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் பிரதமருடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்துல்லா மஹறூப், இம்ரான் மஹறூப், மாவை.சேனாதிராஜா, துரை ரெட்ணசிங்கம் முன்னாள் மாகா ண சபை உறுப்பினர்கள், திணைக் கள தலைவ

ர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண் டனர். (7)


அச்சுவேலி

## இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்

ஓர் நற்செய்தி!

01.07.2019 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது

- குளிரூட்டி வசதியுடன் மண்டபம் இலவசம்.
- உணவுக்கு மட்டும் ரூபா 400 ஒரு சாப்பாட்டிற்கு. அத்துடன் குளிர்பானம், தண்ணீர்ப் போத்தல், பூந்தி லட்டு, ஐஸ்கிறீம், வடை பாயாசத்துடன் சாப்பாடு. முகப்பு வாழைக் குலை, திருமணத்துக்கான கிரியை பொருட்கள் 07 தேங்காய், 03 சோடி மாலை ஐயருக்கான அரிசி, மரக்கறி வகை என்பனவும் வழங்கப்படும்.
- தனித்தனிய மண்டபம் சாப்பாடு பெற விரும்புவர்களுக்கு மேசை, கதிரை வசதிகளுடன் கூடிய மண்டபத்துக்கு கட்டணம் 30 ஆயிரம் ரூபா. வடை பாயாசத்துடன் சாப்பாடு ஒன்று-160 ரூபா.
- வேறு வீடியோ, போட்டோ படப்பிடிப்புக்கு அனுமதிக்கப்படும்.
- இலவசமாக வெளிநாட்டில் உள்ளவர்கள் திருமண நிகழ்ச்சியினை பார்ப்பதற்கு (இன்ரநெற்) வசதியும் உண்டு

மகிழ்ச்சிகரமான செய்தி

திருமண நேர்த்திக்காக தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு கதிரைகளுடன் கூடிய மண்டபம் ரூபா 20 ஆயிரம்.வடை பாயாசத்துடன் கூடிய சாப்பாடு - 150 ரூபா.

முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

"உங்கள் திருப்தியே எங்கள் சேவை"

இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்,
அச்சுவேலி — 077 305 3080

[9368]


# மரண தண்டனை தீர்மானம்; கனடா ஆழ்ந்த கவலை

மரண தண்டனையை நிறைவேற்றுவதில்லை என்ற தனது நீண்டகால கொள்கையை இலங்கை கைவிட தீர்மானித்துள்ளது என்ற தகவல் குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக இலங்கைக்கான கனடா தூதரகம் தெரிவித்துள்ளது.

அனைத்து வழக்குகளிலும் மரணதண்டனையை கனடா கடுமையாகவும் எந்தவித தயக்கமும் இன்றி எதிர்க்கின்றது என தூதரகம் தெரிவித்துள்ளது.

மரணதண்டனை என்பது மனித கௌரவத்திற்கு முரணானது என தெரிவித்துள்ள கனடா நீதி தொடர்பில் மீளமுடியாத தவறுகளிற்கு மரண தண்டனை வழிவகுக்கலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

எந்த நீதி அமைப்பும் தவறிழைக்காது என தெரிவிக்க முடியாது எனவும் கனடா குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் அவசியமானவை என தெரிவித்துள்ள கனடா ஆனால் மரண தண்டனை சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தை கட்டுப்படுத்தும் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளது. (7)

# “விடுதலையாவேன் என்ற நம்பிக்கையில் இருந்தவர் விடுதலையாகாமலேயே விடை பெற்றார்”

## அரசியல் கைதி சகாதேவனின் மனைவி கதறல்

(கொழும்பு)

எனது கணவருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. செய்யாத குற்றத்திற்காக சிறையில் இருப்பதை நினைத்தே அவரது உடல்நிலை மோசமடைந்தது என தெரிவித்த உயிரிழந்த அரசியல் கைதியான சகாதேவனின் மனைவி, விடுதலையாகுவேன் என்ற நம்பிக்கையில் இருந்தவர் இன்று விடுதலையாகாமலே எம்மை விட்டு சென்றுவிட்டார் எனக் கூறி கதறினார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த முத்தையா சகாதேவனின் மனைவி மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் பதுளையைச் சேர்ந்தவர்கள். 1983 கலவரத்துக்குப் பின்னர்தான் கொழும்புக்கு வந்தோம். அப்படியே இங்கேயே இருந்துவிட்டோம். எங்கள் வாழ்க்கை சந்தோசமாகத்தான் இருந்தது.

என்ன நடந்ததோ தெரியாது, எந்தக் குற்றமும் செய்யாத எனது கணவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டது.

வீடு, தோட்டங்களைத் துப்புரவு செய்வதற்காக எனது கணவரை அழைப்பார்கள். அவ்வாறானதொரு வேலைக்குத்தான் அன்றும் அவர் சென்றிருந்தார். வீட்டு உரிமையாளர் பணித்த தோட்ட வேலையை செய்திருக்கிறார். தோட்டத்தைச் சுத்தம் செய்ததோடு மதில் சுவரோடு இருந்த மரக்கிளைகளையும் வெட்டியுள்ளார். அதுவே கைதுக்குக் காரணமாக அமையும் என்று அப்போது அவர் அறிந்திருக்கவில்லை.

அவர் துப்புரவு செய்த தோட்டத்தின் அடுத்த வீட்டில்தான் லக்ஷ்மன் கதிர்காமர் இருந்திருக்கிறார். அங்குவைத்துத்தான் அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் கொலை செய்யப்பட்டதோடு எனது கணவருக்கு தொடர்புள்ளது எனக் கூறி 2005 ஆம் ஆண்டு எனது கணவரைக் கைது செய்தார்கள். 2008 ஆம் ஆண்டுதான் வழக்குப் பதிவு செய்தார்கள்.

இன்றுவரை வழக்குக்குப் போய் வருகிறேன். ஜூன் 27 ஆம் திகதியும் வழக்கு இருந்தது. இருந்த நகைகளை விற்று, கடன் வாங்கித்தான் வழக்குக்குப் போய் வந்தேன். எப்படியும் நான் வெளியில் வந்துவிடுவேன் என்று அவர் அடிக்கடி கூறிக்கொண்டிருப்பார்.

இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட இன்னுமொருவர் 6 மாதங்களுக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்டார். எல்லோரும் விடுதலை செய்யப்படுகிறார்கள். எந்த குற்றமும் செய்யாத என்னை மட்டும் ஏன் சிறையில் வைத்திருக்கிறார்கள் என்று மனமுடைந்து காணப்பட்டார். 62 வயதான என் கணவருக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே சிறுநீரகமொன்று செயலிழந்திருக்கிறது. அதன் பின்னரே அவர் மோசமாக நோய்வாய்ப்பட்டார்.

நீரிழிவு நோயும் இருந்ததால் அதற்கும் மருத்துவம் செய்துகொண்டுதான் இருந்தார். இறுதியில் மற்றைய சிறுநீரகமும் செயற்பாட்டை இழக்கத் தொடங்கியுள்ளது.

இத்தனைக்கும் சிறைச்சாலை வைத்தியசாலையில்தான் சிகிச்சை பெற்று வந்தார். இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில்தான் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒரு மாதகாலமாக சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் தான் அவர் எங்களை விட்டு சென்றுவிட்டார் என கண்ணீருடன் கூறினார். (இ-9)

## ரோஹிதவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

சட்டத்துக்குப் புறம்பான வகையில் தனது வருமானத்தை மீறிச் சொத்துக்களைச் சேர்த்ததாக குற்றம்சுமத்தப்பட்ட கூட்டு எதிரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவுக்கு எதிரான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்தி முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கின் மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஒகஸ்ட் 30 ஆம் திகதி மற்றும் செப்டெம்பர் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மகிந்த அரசாங்க காலத்தில் தனது வருமானத்தை மீறி முறையற்ற விதத்தில் 40 மில்லியனுக்கும் அதிக சொத்துச் சேர்த்ததாக கூறி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வீதியை விட்டு விலகிய பேருந்து குடை சாய்ந்ததில் 28 பேர் படுகாயம்

(ஜயவிந்தாகம)

ஜயவிந்தாகம பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 28 பேர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. காயமடைந்தவர்கள் கரவநெல்லை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

பெலம்பிட்டியிலிருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பயணிகள் பேருந்தொன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் இந்த விபத்து நேர்ந்தது. (இ-7)



## மேல் மாகாணத்தில் கடமையாற்றும் யாழ்.ஆசிரியர் மீது தாக்குதல்

களுத்துறை மாவட்டம் ஹொரணை வலயத்தில் உள்ள குடாகங்க தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் யாழ்.தெல்லிப்பழையைச் சேர்ந்த ஆசிரியர் மீது கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நபரொருவரால் வழிமறித்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் குறித்த ஆசிரியரிடம் தொடர்பு கொண்டபோது தான் களுத்துறை மாவட்டத்திலுள்ள புளத் சிங்கள என்ற கிராமத்தில் வசிப்பதற்காக வும் தானும் நண்பர் ஒருவரும் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வேளை பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக தென்னேன் பகுதியிலுள்ள கடை ஒன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நபரொருவரால் வழிமறிக்கப்பட்டு சிங்கள மொழியில் கேள்வி கேட்டு தலையிலும் முதுகிலும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

அயலவர்களின் உதவியுடன் களுத்துறை பிம்புர வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின் நாகொட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இரு தினங்கள் வைத்திசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் குறித்த சம்பவம் தொடர்பாயில் அலவத்தை பொலிஸில் நண்பரால் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

தனது எதிர்காலப்பாதுகாப்புத்தொடர்பில் கல்வி இராஜாங்க அமைச்சரிடம் தான் முறைப்பாடு தெரிவித்ததாகவும் மாகாணப் பாடசாலை என்றபடியால் குறித்த மாகாணக் கல்வி அமைச்சுக்கு சம்பவம் தொடர்பில் அவர் தெரியப்படுத்துவதாக கூறியதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## வீட்டுத்திட்ட வேலைகளுக்காக நன்னீர் வழங்கத் தீர்மானம்

### உதவிப் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலகத் திற்குட்பட்ட துன்னாலை குடவத்தைப் பகுதி ஜே/370 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்கான நன்னீர் வழங்கும் பணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக கரவெட்டி உதவிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீட்டுத்திட்டங்களுக்கென 3 மாதத்திற்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டு கடந்த வாரம் சீமெந்து வழங்கப்பட்டது.

எனினும் சீமெந்துக்குப் பயன்படுத்தப்படும் நீர் உப்பு நீராகக் காணப்படுவதால் அப் பகுதி மக்கள் வீட்டைக் கட்டுவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் பொது மக்கள் குற்றம்சாட்டினர்.

குறித்த விடயம் தொடர்பில் அப்பகுதி மக்கள் வலம்புரிப்பத்திரிகையின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் பயனாக யாழ்.அரச அதிபருக்கும் கரவெட்டி உதவிப் பிரதேச செளயலாளருக்குமிடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் குறித்த பகுதியில் இடம்பெறும் வீட்டுத்திட்டத்திற்கான நீரை வழங்கத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (10-60)



யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நிதியொதுக்கீட்டில் புன்னாலைக்கட்டுவன் வடக்கு புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் அமைக்கப்படவுள்ள புதிய மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் க.தர்ஷன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டவர்களால் இயக்கப்பட்டு வந்த இரகசிய தொலைத் தொடர்பு நிலையம் விசேட அதிரடிப் படையினரால் முற்றுகை

## பெருமளவு பொருட்கள் மீட்பு; மூவர் கைது



(கடுவலை)

கடுவலை பகுதியில் வெளி நாட்டவர்களால் இயக்கப்பட்டு வந்த இரகசிய தொலைத் தொடர்பு நிலையம் விசேட அதிரடிப் படையினாரால் முற்றுகையிடப் பட்ட நிலையில் பெருமளவான உபகரணங்களும் மீட்கப்பட்டன.

கடுவலைப் பகுதியில் பிலிப்பைன்ஸ் நாட்டு பெண்ணொருவர் இரகசியமாக நடத்திவந்த தொலைத்தொடர்பு நிலையத்தை நேற்று முன்தினம் மாலை விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டனர்.

இந்நிலையில் குறித்த இடத்திலிருந்து இரண்டாயிரம் சிம் அட்டைகள், கையடக்கத் தொலைபேசிகள், கணனிகள் என்பனவற்றை இதன் போது குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் கைது செய்ததாக தெரிவிக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

## கிணற்றிற்குள்ளிருந்து வெடிபொருட்கள் மீட்பு





(யாழ்ப்பாணம்)

புங்கன்குளம் புறூடி வீதியிலுள்ள வெற்றுக்காணியிலுள்ள பாழடைந்த கிணற்றை காணி உரிமையாளர் துப்புரவு செய்யும் போது கிணற்றிற்குள் இருந்து மிதிவெடி, ஆட்லெறி குண்டு உள்ளிட்ட வெடி பொருட்கள் மீட்கப்பட்டன.

காணி உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதன் பிரகாரம், பொலிஸார் வெடி பொருட்களை மீட்டனர்.

வெடி பொருட்களை அழிப்பது தொடர்பில் நீதிமன்றத்திற்கு பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்ததுடன், வெடிபொருட்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-101)

## 225 பாராளுமன்ற உறுப்பினர்களினதும் சொத்து பொறுப்பு விபரங்களைப் பகிரங்கப்படுத்துங்கள்

### ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் வலியுறுத்து

(கிருலப்பனை)

பாராளுமன்ற உறுப்பினர்களின் 2018 - 2019 ஆண்டுக்குரிய சொத்து மற்றும் பொறுப்பு விபரங்களை பகிரங்கமாக வெளியிடுமாறு ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு வலியுறுத்தியது.

கடிதம் மூலம் 225 பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் இதனை வலியுறுத்தியிருக்கும் அவ்வமைப்பு, பாராளுமன்ற உறுப்பினர்கள் பகிரங்கப்படுத்தும் சொத்து, பொறுப்பு விபரங்களை www.tisrilanka.org/MPassets இணையத்தளத்தில் பொதுமக்கள் பார்வையிடக்கூடிய வகையில் வெளியிடுவதற்கும் ஏற்பாடு செய்துள்ளது.

கிருலப்பனையிலுள்ள ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்விடயம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பின் செயற்பாட்டாளர் சங்கீதா குணரத்ன இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

வருடாந்தம் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது சொத்து, பொறுப்பு விபரங்களை சபாநாயகரிடமும் அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதியிடமும் கையளிக்க வேண்டும்.

எனினும் அவ்வாறு கையளிக்கப்படும் விபரங்கள் பொதுமக்கள் பார்வையிடக்கூடிய வகையில் பகிரங்க ஆவணங்களாக வெளியிடப்படுவதில்லை.

அதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்கள் 2018/2019 ஆம் ஆண்டுக்குரிய தமது சொத்து, பொறுப்பு விபரங்களை இம்மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் சபாநாயகரிடம் அல்லது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.


அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை பொதுமக்கள் பார்வையிடத்தக்க வகையில் பகிரங்கமாக வெளியிடுமாறு 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்.

இதன்மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மீது சுமத்தப்படுகின்ற மோசடிக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியும் என்பதுடன், மக்களும் இந்த ஆவணங்களைப் பார்வையிடுவதன் ஊடாக எதிர்வரும் தேர்தல்களில் தாம் தெரிவுசெய்ய வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் குறித்த சிறப்பான தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.

கடந்த பெப்ரவரி மாதம் பாராளுமன்ற உறுப்பினர்களான தாரக பாலசூரிய, எம்.ஏ.சுமந்திரன், விதுர விக்ரமநாயக, வாசுதேவ நாணயக்கார, அலிசாஹீர் மௌலானா மற்றும் இராஜாங்க அமைச்சர்களான எரான் விக்ரமரத்ன, ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் தமது சொத்து, பொறுப்பு விபரங்களைப் பகிரங்கமாக வெளியிட்டமை பாராட்டத்தக்க முன்னுதாரணத்தை வழங்கியிருந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 52

## பிஞ்சைப் பழுக்க வைத்து நஞ்சாக்கும் நாசகர்க்கு எதிராக...



மா, பலா, வாழை என்ற
முக்கனிகளும் வெறும் கனிகளல்ல
எம் வாழ்வை செழுமையாக்கும் முத்துக்கள்
எம் முன்னோர்கள் தந்த சொத்துக்கள்
ஏனோ இன்று தடம்மாறி
இடம் மாறி ஓடுகின்றோம்

முத்திப்பழுத்த பழங்களை
நித்தமுண்டு ஆரோக்கியமாய் வாழ்ந்த
எம் முப்பாட்டன் பரம்பரை
மருந்தென்ற ஒன்றை
மருந்துக்கும் கண்டதில்லை

இன்று பிஞ்சுக்கு மருந்தடித்து
வெம்பிப் பழுக்க வைத்து
விற்றுத் தீர்த்து விடுகிறோம்
அதைத் தின்று தீர்த்த எம்மினம்
புற்று நோயின் பிடியில்...

பிஞ்சுப் பழத்திற்கு மருந்தடித்து
பழுக்க வைத்து பணம் தேடும் வீணரே
எம் பரம்பரை புற்றில் மாட்டுகிறது
இந்தப் பெரும் பாவம் உம்மை
சும்மா விட்டிடுமோ?

அதிகாரிகளே!
மக்கள் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளும்
சுகாதாரப் பரிசோதகரை முடுக்கிவிடும்
முட்டுச் சந்துக்குள் வைத்து
பிஞ்சைப் பழுக்க வைத்து
நஞ்சாக்கும் நாசகர்க்கு எதிராக
கடுமை காட்டும்-இது நடந்தால்
வடக்கில் புற்றுநோய் பரம்பல்
வீழ்ச்சியடையும்

எம் இனத்தின் ஆரோக்கியம்
அன்றைய பாட்டன் முப்பாட்டன் காலத்தை எட்டும்
இதுவே இன்றைய தேவை...

மாணவ. நா.கஜேந்திரன்

## ஐ.எஸ்.முகாமில் பயிற்சி பெற்றவரிடம் மூன்று மாதங்கள் விசாரணை!


அம்பாந்தோட்டையில் ஐ.எஸ். முகாமெனக் கூறப்படும் முகாமில் பயிற்சி பெற்ற ஒருவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டார்.

அம்பாந்தோட்டை பயிற்சி முகாமில் பயிற்சிபெற்ற குறித்த நபரை, காத்தான்குடியில் கடந்த 24ஆம் திகதி கைது செய்ததாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை யடுத்து குறித்த நபரின் வீட்டை சுற்றிவளைத்த பொலிஸார், 36 வயதுடைய முஹம்மது புஹாரி முஹம்மது அஸ்வர் என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை அவர் பயிற்சி பெற்ற அம்பாந்தோட்டை முகாமிற்கு அழைத்துச் சென்று, அங்கு பயிற்சி குறித்த ஒத்திகையிலான விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதன் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார். (இ-7)



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதமர் ஏமாற்றுகிறார்

## மக்கள் எம்மீது நம்பிக்கையற்றுப் போக வாய்ப்புள்ளதாகவும் செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

(வவுனியா)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள அனைவரையும் ஏமாற்றுகின்ற செயற்பாட்டை முன்னெடுத்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா பாலமோட்டையில் அவரது விசேட நிதியில் அமைக்கப்பட்ட சனசமூக நிலைய கட்டடத்தினை திறந்து வைத்ததன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், கல்முனை பிரதேச செயலகத்தினை தரம் உயர்த்தும் செயற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக செயற்பட்டிருந்தது.

ஆனால் இந்த விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனைவரையும் ஏமாற்றுகின்ற செயற்பாட்டை முன்னெடுத்துள்ளார்.

எமது பேச்சுக்களின் ஊடாக ஒரு கணக்காளரை நியமிப்பதற்கான கடிதங்களை தற்போதைய அமைச்சராக இருப்பவர் அரச அதிபருக்கு அனுப்பி அதனை நடைமுறைப்படுத்தும் நிலை காணப்படும் போது மீண்டும் அதனை ரத்துச்செய்கின்ற செயற்பாட்டை செய்திருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக கொண்டிருக்கின்ற அரசாங்கம் கூடுதலாக முஸ்லிம் அமைச்சர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையுமே நம்புவதாக எனது கணிப்பில் தெரிகின்றது. அவர்கள் அமைச்சரவையில் இருக்கின்ற காரணத்தால் அவ்வாறு இருக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுவான நோக்கம் அரசியல் தீர்வு கிடைக்கப்பெற வேண்டும் என்பதில் மிக ஆளுமையோடு செயற்படும். அதே நேரத்தில் கல்முனை பிரதேச செயலகத்தினை தரம் உயர்த்துவதில் முழுமையாக செயற்பட்டிருந்தோம். தற்போது காலம் கனிந்திருக்கிறது.

அந்தவகையில் நாம் ஒட்டுமொத்தமாக ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதாவது கல்முனை விடயம் மட்டுமல்ல எமது அரசியல் தீர்வு விடயமாகவும் சிந்திக்க வேண்டும்.

அது நம்பிக்கை இல்லா தீர்மானம் வருகின்ற போது இந்த அரசாங்கத்தோடு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் முடிவெடுக்கவேண்டும். அந்த முடிவை அறிவிக்க வேண்டும். இந்த விடயங்களின் ஊடாக சில விடயங்களை நாம் சாதிக்கலாம் என எண்ணுகின்றேன்.

இந்நிலையில் பிரதமராக இருக்கலாம் ஜனாதிபதியாக இருக்கலாம் தமிழ்த் தரப்பினர் தம்மோடு நிற்கமாட்டார்கள் என்ற சந்தேகத்தோடு செயற்படுகின்றனர்.

நாங்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியதே அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதற்கேயாகும். கடந்த வரவு-செலவுத் திட்டத்திலும் நான் கல்முனை விடயம் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தை அரசாங்கம் கவனத்தில் எடுக்காமையால் நடுநிலைமை வகித்திருந்தேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் நான் மட்டுமே இந்த முடிவெடுத்து செயற்பட்டவன்.

ஆகவே இனியாவது நாங்கள் சந்தர்ப்பங்களை பயன்படுத்த வேண்டும். ஏற்கனவே சில விடயங்களில் நாம் ஏமாற்றப்பட்டிருந்தாலும் தற்போது இருக்கின்ற சந்தர்ப்பத்தினையும் பயன்படுத்தாதுவிட்டால் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது நம்பிக்கையற்றுப்போகும் வாய்ப்பு முழுமையாக ஏற்படும் என மேலும் தெரிவித்தார். (9)

# சகவாழ்வுக்கு தடையாகவுள்ள கருத்துக்களை தோற்கடிப்போம்

## மன்னாரில் விழிப்புணர்வு நிகழ்வு



சமய மற்றும் இன முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் முகமாக நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளை கோருவதுடன் மக்கள் மத்தியில் வெளிப்படையான கலந்துரையாடலை மேற்கொள்ள வாய்ப்பளிக்கும் நிகழ்வு நேற்று மன்னார் பொது நூலக முன்றலில் இடம் பெற்றது.

தேசிய சமாதான பேரவை ஏற்பாட்டில் CCT நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்திலுள்ள மதத் தலைவர்கள், மதம் சார்ந்த பிரதிநிதிகள், கலந்து கொண்டனர்.

குறித்த ஒன்றுகூடலின் நாடளாவிய ரீதியில் காணப்படும் இன, மத முரண்பாடுகளுக்கான காரணங்களை எவ்வாறு குறைக்கலாம் என்பது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. அதே நேரத்தில் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற சட்டமுறைகள் தொடர்பாகவும் ஒவ்வொரு நபர்களும் அச் சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டிய முக்கியத்துவம் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் சகவாழ்விற்கு தடையாக உள்ள கருத்துக்களை தோற்கடிப்போம்,நிராகரிப்போம் என எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங்கள்,சுவரொட்டிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டதுடன் பொது இடங்களில் காட்சிப்படுத்தும் வகையில் ஒட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(9)

# முல்லைத்தீவில் தொடரும் காடழிப்பு

## அதிகாரிகளும் உடந்தை என மக்கள் விசனம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக காடழிப்பு இடம் பெற்று வருவதாகவும் இதுகுறித்து அரச அதிகாரிகள் கண்டு கொள்வதில்லை என்றும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள, மாங்குளம் மற்றும் பனிக்கன்குளம் ஆகிய பிரதேசத்திற்கு இடைப்பட்ட பகுதியிலேயே இவ்வாறு காடழிப்பு இடம்பெற்று வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டுசென்ற போதிலும் அதனை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் அரச திணைக்களம் ஒன்றை அமைப்பதற்காகவே இவ்வாறு காட்டின் பெரும் பகுதி அழிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் தற்போது காணப்படும் அதிக வெப்பம் மற்றும் மழை வீழ்ச்சி இன்மையால் வறட்சியான நிலை காணப்படும் நிலையில், இவ்வாறு கட்டுப்பாடின்றி காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றமையானது எதிர்காலத்திற்கே ஆபத்தான ஒன்றாகும் என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


காடழிப்பை இல்லாது செய்வதற்கான நடவடிக்கைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புக்கமைவாக இடம்பெற்றுவரும் நிலையிலேயே, முல்லைத்தீவில் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, வறட்சி மற்றும் காடழிப்பு குறித்து அரசாங்கம் அக்கறை செலுத்தாமை தொடர்பாக முல்லைத்தீவுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனிடம் கேட்ட போது, "முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய காடழிப்பு ஒன்று இடம்பெற்று வருகின்றது.

குறித்த காடழிப்பு குறித்து அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். அத்துடன் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளோம். இந்த காடழிப்பிற்கு அரச அதிகாரிகள் மாத்திரமல்லாது அரசியல்வாதிகளும் உடந்தையாக இருக்கின்றனர்" என தெரிவித்தார். (இ-9)




# பெண் முயற்சியாளர்களுக்கான தெளிவூட்டும் செயலமர்வு



யுத்தத்திற்கு பின்னர் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் பெண்தொழில் முயற்சியாளர்கள் கிராம மட்ட பெண் சுய தொழில் அமைப்புக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் நீடித்து நிலைக்கக் கூடிய விதமாக எவ்வாறு பெண்கள் செயற்பட வேண்டும் என்பது தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு மன்னாரிலுள்ள பொது நோக்கு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

மன்னார் சமூக,பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (MSEDO) ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் மன்னார் மாவட்டத்திலுள்ள மடு, மாந்தை, முசலி, நானாட்டான், மன்னார் தீவக பகுதிகளை சேர்ந்த பெண் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சுய தொழில் முயற்சியாளர்கள் உட்பட மெசிடோ நிறுவனத்தினால் கிராம ரீதியில் உருவாக்கப்பட்ட பெண்கள்,சிறு குழு அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். (9)

# வன்னி விளாங்குளத்தின் கீழ்

## சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரிதும் பாதிப்பு

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு, பாண்டியன் குளம் கமநல சேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட, வன்னி விளாங்குளம் கமக்கார அமைப்பு விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக வன்னி விளாங்குளத்தில் நீர் வற்றிப்போயுள்ளதால், அந்த குளத்தின் கீழ் சிறுபோகப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளே மேற்படி பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சிறுபோகக் கூட்டத்தில், 24ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளத் தாம் தீர்மானித்திருந்தபோதும், 15ஏக்கர் நிலத்திலேயே தாம் பயிர்ச்செய்கையை மேற்கொண்டதாகவும், இருப்பினும் தற்போது நிலவும் அதிக வெப்பநிலையால், வன்னிவிளாங்குளத்தில் உள்ள நீர் விரைவாக வற்றிவிட்டதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

எனவே வன்னி விளாங்குளத்தில் இருந்த நீரை நம்பி, நெற்பயிர்ச்செய்கையினை மேற்கொண்ட தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை தாம் கடன்பட்டு விதை நெல், மருந்து, பசளை, நிலப்பண்படுத்தல் என்பவற்றினை மேற்கொண்டதாகவும், இவ்வாறாக தாம் மேற்கொண்ட பயிர்ச்செய்கையானது, தற்போது அறுவடைக்காலத்தை அண்மித்துள்ளபோது குளத்தில் நீர் இன்மையால் பயிர்கள் அனைத்தும் கருகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதனால் தாம் கடனாளிகளாகியுள்ளதாகவும் வன்னி விளாங்குளம் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

எனவே தமது நிலையினைக் கருத்திற் கொண்டு உரிய அதிகாரிகள் தமக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டுமெனவும் அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

# நாம் அனைவராலும் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்! வவுனியா ஆச்சிபுரம் கிராம மக்கள் ஆதங்கம்



(குருமன்காடு)

வவுனியா, ஆச்சிபுரம் கிராம மக்கள் தண்ணீர்ப்பிரச்சினை, வீதி புனரமைக்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆச்சிபுரம் கிராமம் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை குடியேற்றுவதற்காக 2000 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒரு மீள்குடியேற்ற கிராமம் ஆகும்.

இக் கிராமத்தில் 373 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், பலரும் நாளாந்தக் கூலி வேலை மூலம் தமது சீவனோபாயத்தை மேற்கொள்பவர்களாக காணப்படுகின்றனர்.

இக்கிராமமானது அரசாங்கம் வழங்கும் சலுகைகளிலிருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். அதனை வெளிப்படுத்தும் வகையில் இக்கிராமத்தின் வீதிகளும் வறுமை நிலையும் காணப்படுகின்றது.

தங்கள் கிராமத்தின் பாதைகள் மோசமாகக் காணப்படுவதனால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாகவும் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் எனப் பலரும் இதனால் பாதிக்கப்படுவதாகவும் மழை காலங்களில் மழை நீரினாலும் கோடையில் புழுதி மண்டலத்தாலும் பாதிப்பு ஏற்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

அத்துடன், வவுனியாவில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக குடிநீருக்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். கிராமத்தில் இருக்கும் ஒரே ஒரு குழாய்க்கிணறும் பழுதடைந்துள்ள நிலையில் பெரும் சிரமத்தின் மத்தியில் குடிநீரை பெற்று வருகின்றனர்.

மேலும், கிராமத்தில் உள்ள கிணறுகள் வற்றி வறண்டுவிட்டதனால் தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக அம்மக்கள் தெரிவித்தனர்.

கம்பரெலிய போன்ற அபிவிருத்திகள் சில கிராமங்களுக்கு மீண்டும் மீண்டும் கிடைக்கின்ற போதும் ஆச்சிபுரம் கிராமம் மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தாம் பிள்ளைகளுடன் கஷ்டப்படுவதாகவும் கிராம மக்கள் கண்ணீர் விடுகின்றனர்.

தமது நிலை தொடர்பில் அரசியல்வாதிகள், அதிகாரிகள் கவனமெடுத்து அடிப்படை வசதிகளை மேற்கொண்டு தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (9-250)




# மன்னாரில் பீடி இலைகள் மீட்பு



(மன்னார்)

மன்னார் கீரி கடற்கரை மீன் வாடி அமைந்துள்ள பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகுதி பீடி சுற்றும் இலைகளை மன்னார் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் 5 மூடைகளைக் கொண்ட 140 கிலோ பீடி சுற்றும் இலைகளே மேற்படி மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரி எம்.என்.மடியசேகர தலைமையில் சென்ற மதுவரி திணைக்கள உத்தியோகத்தர்கள் குறித்த மூடைகளை மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருவதோடு, விசாரணைகளின் பின்னர் குறித்த பீடி இலைகள் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் படவுள்ளதாக மன்னார் மதுவரி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (9-285)

## வடமாகாண அரச சாரதிகள் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் தலைவர் ம.கஜந்தன் தலைமையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து பொதுச் சபை அங்கத்தவர்களையும் தவறாக கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# வவுனியாவில் காணாமல் போன சகோதரர்கள் கண்டுபிடிப்பு

நெடுங்கேணி நயினாமடு பகுதியிலிருந்து கடந்த வியாழக்கிழமை நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்கு வவுனியா சென்ற போது காணாமல் போன இரு சகோதரர்களை முல்லைத்தீவு, முள்ளியவளைப் பகுதியில் பூசகர் ஒருவர் சட்டத்தரணியினூடாக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்துள்ளார்.

இவ்விரு சகோதரர்களும் கடந்த 7 நாட்களாக முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியிலுள்ள பூசகர் ஒருவருடன் வசித்து வந்துள்ளதாகவும் நேற்று முன்தினம் சட்டத்தரணியூடாக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் வழக்கு விசாரணைகளுக்கு பயந்தே இவ்வாறு ஒழிந்து கொண்டதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாக அவர்களின் தந்தை விஜயசுந்தர் மேலும் தெரிவித்தார். (9-250)

# இராணுவத்தினரின் இறம்பைக்குளம் சோதனைச் சாவடி அகற்றம்

(குருமன்காடு)

வவுனியா இறம்பைக்குளம் ஹொரவப்பொத்தானை வீதியில் புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் அமைந்துள்ள பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடி நேற்று அகற்றப்பட்டுள்ளது.

அத்துடன் வவுனியாவிலுள்ள சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பேருந்து நிலையம், வங்கிகள் போன்றவற்றுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பும் அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தினையடுத்து வன்னி பிராந்திய இராணுவ தளபதியின் உத்தரவின் பேரில் வவுனியா முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது நாட்டில் அமைதி நிலை காணப்படுவதனால் சோதனைச்சாவடிகளை அகற்றுமாறு எமக்கு வழங்கப்பட்ட உத்தரவின் பேரில் இவற்றினை அகற்றுவதாக சோதனைச்சாவடியில் கடமையிலிருந்த இராணுவத்தினர் தெரிவித்தனர். (9-250)

# மன்னார் பருப்புக்கடந்தான் பகுதியில் விதிமுறைகளை மீறி கிரவல் மண் அகழ்வு

## அனுமதியை இரத்துச் செய்யுமாறு சாள்ஸ் எம்.பி.கோரிக்கை

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பருப்புக்கடந்தான் பகுதியில் கிரவல் மண் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதும், அனும திப்பத்திர விதி முறைகளை மீறி கிரவல் மண் அகழ்வு செய்யப்பட்டு வருவதாக பருப்புக்கடந்தான் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த நிலையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது நீர்ப்பாசனப் பொறியியலாளரும் சமுகமளித்திருந்தார். குறித்த பகுதியில் கிரவல் மண் அகழ்வு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ள போதும், அனுமதிப்பத்திர விதி முறைகளை மீறி கிரவல் மண் அகழ்வு செய்யப்படுவதாகவும் இதனால் பல வீதிகள் சேதமடைந்துள்ளமையினால் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.



நிலைமையை நேரடியாக அவதானித்த நீர்ப்பாசன பொறியியலாளர் குறித்த பகுதியில் அனுமதிப்பத்திர விதி முறைகளை மீறி மண் அகழ்வு செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

அந்த வகையில் உடனடியாக குறித்த பகுதியில் கிரவல் மண் அகழ்வு செய்வதற்கான அனுமதியை இரத்துச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். (9-285)






வவுனியா பாலமோட்டை சனசமூக நிலையம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. பாலமோட்டை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கு.குருபரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவர் து.நடராஜசிங்கம், உறுப்பினர்களான கார்த்தி, அஞ்சலா மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



மு/குமுழமுனை மகா வித்தியாலய மாணவர்களுக்கான சர்வதேச போதை ஒழிப்பு விழிப்புணர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை வித்தியாலய முதல்வர் க.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு உரையை செரண்டிப் சிறுவர் இல்லத்தின் மணவளக்கலை துணைப் பேராசிரியர் பு.பிரணவன் ஆற்றினார்.

# பாரதம்

## நாடு முழுவதிலும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை - மோடி



(டில்லி)

நாடு முழுவதும் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், நாடு முழுவதும் 226 மாவட்டங்களில் நிலவும் குடிநீர் பிரச்சினைகளை தீர்க்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வாக்கு வங்கி மோசடியினாலேயே பாரதிய ஜனதா கட்சி வெற்றிபெற்றதாக குற்றம் சாட்டும் எதிர்க்கட்சியினர் ராகுல் காந்தி மற்றும் சோனியா காந்தி ஆகியோரின் தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெறாமைக்கு என்ன பதில் சொல்லுவார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (7)

## ஏமனில் அரச படை

## 8 ஹவுத்தி போராளி

(சனா)


ஏமன் நாட்டின் டைஸ் பகுதியில் அரசு படைகளுடனான மோதலில் 8 ஹவுத்தி போராளிகள் பலியாகினர். 12 இற்கும் மேற்பட்ட போராளிகள் காயமடைந்தனர்.

ஏமன் நாட்டின் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்தி புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் சனா உட்பட பல பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அந்த பகுதிகளை சுற்றி சோதனைச் சாவடிகள் அமைத்துள்ளனர்.

சர்வதேச ஆதரவு பெற்றுள்ள ஏமன் அரசுக்கு சவுதி அரேபியா தலைமை

## எனது இராஜினாமா முடிவில் எந்த மாற்றமும் இல்லை

### ராகுல் உறுதி



(டில்லி)

தன்னுடைய இராஜினாமா முடிவில் எந்த மாற்றமும் இல்லை எனவும், அந்த முடிவில் இருந்து தான் பின்வாங்கவும் மாட்டேன் என்றும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களின் கூட்டம் நேற்று டில்லியில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தின்போது ராகுல் காந்தி தனது இராஜினாமா முடிவை திரும்ப பெற வேண்டுமென வலியுறுத்தி தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாக தமிழக காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், ராகுல் காந்தி தலைவர் பொறுப்பை தொடர வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதற்கு மறுப்பு தெரிவித்த ராகுல் காந்தி, தான் தற்போது தலைவர் பொறுப்பில் கிடையாது எனவும், தன்னுடைய இராஜினாமா முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றும் தெரிவித்தார்.

17ஆவது மக்களவைக்கான நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்தது. இந்த தோல்விக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பொறுப்பேற்று பதவி விலகுவதாக அக்கட்சியின் செயற்குழு கூட்டத்தில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## ரஷ்யாவுடனான ஏவுகணை ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்கோம்

### துருக்கி ஜனாதிபதி திட்டவட்டம்



அமெரிக்காவின் நெருக்கடியை ஏற்று, ரஷ்யாவிடமிருந்து எஸ்-400 ஏவுகணைத் தொகுதிகளை வாங்குவதற்கான ஒப்பந்தத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் என துருக்கி ஜனாதிபதி எர்டோகன் அறிவித்துள்ளார்.

அந்த ஏவுகணைகளை வாங்கிப் பயன்படுத்துவது என்பது துருக்கியின் இறையாண்மை தொடர்பான விவகாரம் ஆகும். எனவே, அந்த இறையாண்மையைக் குலைக்கும் வகையில் அந்தத் திட்டம் கைவிடப்படாது.

திட்டமிட்டபடி ரஷ்யாவிலிருந்து எஸ்-400 ஏவுகணைகள் அடுத்த மாதம் வரத் தொடங்கும். துருக்கியின் பாதுகாப்பு தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு எந்த நாட்டின் அனுமதியும் நமக்குத் தேவையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எஸ்-400 ஏவுகணைத் தொகுதிகளை ரஷ்யாவிடமிருந்து வாங்க துருக்கி ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதற்கு அமெரிக்கா கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தும், அந்த ஒப்பந்ததைக் கைவிட துருக்கி ஜனாதிபதி எர்டோகன் மறுத்துவிட்டார்.

அதற்குப் பதிலடியாக, துருக்கிக்கு தனது அதிநவீன எஃப்-35 ரக போர் விமானங்களை விற்பனை செய்வதை நிறுத்தி வைப்பதாக அமெரிக்கா அறிவித்தது. இந்நிலையிலேயே துருக்கி ஜனாதிபதி மேற்கண்டவாறு அறிவிப்பை விடுத்துள்ளார். (7)

## புல்வாமா பயங்கரவாதத் தாக்குதல் உளவுத்துறையின் தோல்வியல்ல

### மத்திய அரசு கூறுகிறது

(புல்வாமா)

புல்வாமாவில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் உளவுத்துறையின் தோல்வியல்ல என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் நேற்று முன்தினம் புதன்கிழமை கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே உள்துறை அமைச்சகம் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளது.

இது குறித்து மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவிக்கையில், "அனைத்து பாதுகாப்பு முகாமைகளும் ஒருங்கிணைந்த முறையில் செயற்படுகின்றன. உளவுத்துறையின் உள்ளீடுகள் பல்வேறு நிறுவனங்களிடையே நிகழ்நேர அடிப்படையில் பகிரப்படுகின்றன.

ஜம்மு-காஷ்மீர் கடந்த 30 ஆண்டுகளாக பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லை தாண்டிய நிதியுதவியால் பயங்கரவாதம் ஆதரிக்கப்படுகிறது.

இருப்பினும், பயங்கரவாதத்தின் மீதான சகிப்புத்தன்மையற்ற கொள்கை மற்றும் பாதுகாப்பு படையினரால் தொடர்ச்சியான நடவடிக்கை ஆகியவற்றின் காரணமாக ஏராளமான பயங்கரவாதிகள் கடந்த சில ஆண்டுகளில் கொல்லப்பட்டுள்ளனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் பயங்கரவாதிகள் பாதுகாப்பு படையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தியதில் 45 பாதுகாப்பு படை வீரர்கள் உயிரிழந்தனர்.

இதனால் உளவுத்துறை முன்கூட்டியே தகவல் அளித்தும் பாதுகாப்புப் படை வீரர்களை வான் வழியாக வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றச்சாட்டுக்கள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## கஷோக்கியின் படுகொ விரைவாக தீர்வு கா

### பிரிட்டன் பிரதமர் தெரே



(லண்டன்)

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் படுகொலை குறித்து மிக விரைவாக தீர்வு காணப்பட வேண்டுமென பிரித்தானியா விரும்புவதாக பிரதமர் தெரேசா மே தெரிவித்துள்ளார்.

கஷோக்கியின் ப
சவுதி அரேபியா மு
சர்வதேச சட்டங்கள
விதத்திலும் விசாரணை
டும் எனவும் பிரதமர்
தினம் வலியுறுத்தின

கஷோக்கியின் படு
பாக சவுதி இளவரச
சல்மான் மற்றும் பிற
களுக்கு எதிராக நம்ப
கள் கிடைக்க பெற்றுள்
அவர்கள் விசாரணை
பட வேண்டுமென ஐ
மைகள் புலனாய்வாள
வாரம் தெரிவித்திருந்
ஆனாலும் இ

# வெளிநாடு

## படைகள் தாக்குதல்
## போராளிகள் உயிரிழப்பு

யிலான கூட்டுப் படைகள் ஆதரவு அளித்து வருகின்றன. அவர்கள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து விமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த தாக்குதலில் சில நேரங்களில் அப்பாவி பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர்.

இந்நிலையில், ஏமன் நாட்டின் டைஸ் பகுதியில் ஹவுத்தி புரட்சிப் படையினரை குறிவைத்து நேற்று முன்தினம் ஏமன் நாட்டு அரச படைகள் தாக்குதல் நடத்தின.

இந்த மோதலில் ஹவுத்தி புரட்சிப் படையை சேர்ந்த 8 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 12 இற்கு மேற்பட்ட போராளிகள் படுகாயம் அடைந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் தற்கொலைப் படைத் தாக்குதல்!
### நால்வர் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் உள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் பொலிஸார் உட்பட நால்வர் உயிரிழந்தனர்.

இந்தக் கல்லூரியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பரீட்சை நடைபெற்ற போது அங்கு சென்ற தற்கொலைப் படை பயங்கரவாதிகள் திடீரெனத் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஒரு பொலிஸார் உயிரிழந்ததுடன், தாக்குதல் நடத்திய மூன்று பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

அத்துடன், பொலிஸார் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (7)

## ஆற்றைக் கடக்க முற்பட்ட தந்தை, மகள் நீரில் மூழ்கிப்பலி!
# அமெரிக்க எல்லைக் கொள்கைகள் குறித்து விவாதத்தை தூண்டியுள்ள புகைப்படம்

(வோஷிங்டன்)

அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லைப் பகுதியில் நீரில் மூழ்கி இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட தந்தை மற்றும் அவரது மகளின் புகைப்படம் அமெரிக்க எல்லைக் கொள்கைகள் குறித்து புதிய விவாதத்தைத் தூண்டியுள்ளது.

ரியோ கிராண்டே ஆற்றைக் கடந்து அமெரிக்காவின் டெக்சிக்குள் மாநிலத்திற்குள் செல்ல முயன்றபோது சல்வடோரை சேர்ந்த 26 வயதான ஒஸ்கார் அல்பெர்ட்டோ மார்டினெஸ்



ரமிரெஸ் மற்றும் அவரது 2 வயது மகளான வலேரியா ஆகியோர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவர்களது உடலங்கள் கடந்த திங்கட்கிழமை மெக்ஸிக்கோவின் மற்றமோரோஸின் (Matamoros) அருகேயுள்ள ஆற்றங்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புகைப்படம் அமெரிக்காவின் தெற்கு எல்லையில் நடைபெறும் இடம்பெயர்வு நெருக்கடியின் கொடூரமான யதார்த்தத்தை பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தந்தையின் கழுத்தை கட்டியணைத்த நிலையில் குழந்தை இறந்த நிலையில் காணப்படும் புகைப்படம் அதிர்ச்சியளிப்பதாகவும் கொடூரமானதாக உள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் கவலை வெளியிட்டுள்ளன. (7)

## கொலை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்
### தெரேசா மே வலியுறுத்து

...ஷொக்கியின் மரணம் குறித்து சவுதி அரேபியா முழுமையாகவும் சர்வதேச சட்டங்களை பின்பற்றும் வகையிலும் விசாரணை நடத்த வேண்டும் எனவும் பிரதமர் மே நேற்று முன்தினம் வலியுறுத்தினார்.

...ஷொக்கியின் படுகொலை தொடர்பில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் பிற சிரேஷ்ட அதிகாரிகளுக்கு எதிராக நம்பகமான ஆதாரங்கள் கிடைக்க பெற்றுள்ள காரணத்தால் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் புலனாய்வாளர் ஒருவர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

எனினும் இவை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் என சவுதி அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில் இந்த படுகொலை சம்பவம் குறித்து நேற்று முன்தினம் பிரித்தானியா பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்த பிரதமர் தெரேசா மே இந்த கொடூரமான கொலைக்கு நாங்கள் பொறுப்புக் கூறலைக் காண விரும்புகிறோம்.

சர்வதேச மற்றும் தேசிய சட்டங்களின் மீறல்கள் மீண்டும் நடக்காது என்பதை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை சவுதி அரேபியா எடுக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இப்படுகொலை மீதான தொடர்ச்சியான விசாரணையை நாங்கள் நெருக்கமாகப் பின்தொடர்கிறோம். இது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சட்டத் தரங்களுக்கு ஏற்ப தொடரும் எனவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம் என மேலும் தெரிவித்தார். (7)

## கம்போடிய கட்டட விபத்து; ஏழுபேர் மீது வழக்கு பதிவு
### நால்வர் கைது



(சீஹனூக்வில்)

கம்போடியாவில் அண்மையில் இடம்பெற்ற கட்டட விபத்தினைத் தொடர்ந்து 7 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கம்போடியாவின் சிஹானோக்வில் நகரில் கடந்த சனிக்கிழமை ஏழு மாடிக்கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 23 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

இந்நிலையில் குறித்த விபத்தினையடுத்து 5 சீனர்கள் உள்ளிட்ட 7 பேர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சீனாவைச் சேர்ந்த குறித்த கட்டடத்தின் உரிமையாளர் செங் குன் மீது அலட்சியம் காரணமாக மரணத்தை ஏற்படுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், குறித்த குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததாக சீனாவைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரர், கட்டுமான மேலாளர், பொறியியலாளர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தலைமறைவாகியுள்ளவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கம்போடிய அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

# 2976 கிலோ ஹேரோயின் மீட்பு!

## 2 இலட்சத்து 29 ஆயிரம் பேர் கைது

சுமார் பத்து வருடகாலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருளுக்கு எதிரான சுற்றி வளைப்புக்களில், சுமார் 2,976 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

அத்துடன் இது தொடர்பில் 2 இலட்சத்து 29 ஆயிரம் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியது.

2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே இவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அந்த வகையில், அதிகளவிலான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட ஆண்டாக 2018 ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது. (இ-7)

# 19 ஆவது திருத்தத்தை அகற்றினால் சர்வாதிகாரமே தழைத்தோங்கும்

## சிறிநேசன் எச்சரிக்கை



(கொழும்பு)

19 ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றுவது குடும்ப ஆதிக்கத்தையும் தனிப்பட்டவர்களின் விருப்பு, வெறுப்புக்களையும் சாதிப்பதற்கான ஒரு விடயமாகவே அமையும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

அத்துடன், 19 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக மக்கள் அதிகாரங்களைப் பெறக்கூடிய வகையிலும் ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய நிலையிருந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியிடம் இருந்த பல சர்வாதிகார நோக்குடனான அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. அதேபோன்று ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக இயங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது சுயாதீன முடிவுகள் எடுக்கப்பட்டதுடன் ஜனாதிபதி, சுயாதீன ஆணைக்குழுவால் எடுக்கப்படும் முடிவுகளை அனுசரித்துச் செல்லக்கூடிய வகையிலும் இந்தச் சட்டமூலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தனி மனித சர்வாதிகாரத்தை அடக்கி ஜனநாயக ரீதியான ஒரு அதிகாரப்பரவலாக்கலை செய்யக்கூடிய ஒரு சட்டமாக 19 ஆவது திருத்தச் சட்டம் உள்ளது. நாடாளுமன்றத்திற்கும் அமைச்சரவைக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டன. ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

கடந்த ஒக்டோபர் 26 சதித் திட்டமும் இந்தச் சட்டமூலத்தின் ஊடாகவே தோற்கடிக்கப்பட்டது.

இந் நிலையில், 19 ஆவது திருத்தச் சட்டம் அகற்றப்பட வேண்டும் என ஜனாதிபதி கூறுவாரானால் அவர் ஜனநாயகத்தின் மீது அக்கறை கொண்டவராக இல்லாமல் தனிமனித சர்வாதிகாரத்தைப் கையிலெடுக்க விரும்புகின்றார் என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

19 ஆவது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதியே கொண்டு வந்தார். அதன்மூலம் மக்கள் அதிகாரத்தைப்பெறக்கூடிய வகையிலும் ஊடகங்கள் சுதந்திரத்தை பேணக்கூடிய வகையிலும் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய நிலையும் ஏற்படுத்தப் பட்டது.

இந்தச்சூழலில் 19 ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றக்கூடாது என்பதுடன் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டு நாடாளுமன்ற, அமைச்சரவை அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே நாட்டிற்கு உகந்ததாக அமையும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அஸ்கிரியபீட மகாநாயக்கர் கைது

## மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தீர்மானத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும்

(கொழும்பு)

அஸ்கிரிய பீட மாகாநாயக்க தேரரைக் கைது செய்யுமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் பதில் பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டுள்ளமை தவறான செயற்பாடாகும். குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து ஏற்படவிருந்த இன வன்முறைகள் மதத் தலைவர்களின் வழிநடத்தலாலே தவிர்க்கப்பட்டது என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மதத் தலைவர்களின் கருத்துக்களுக்கு அரசியல் வேறுப்பாடுகளின்றி முன்னுரிமை வழுங்கப்படுகின்றது. அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த மதத்திற்கும் இணையாக ஏனைய மதங்களுக்கும் உரிய அந்தஸ்த்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர் வரகாகொட ஞானரத்ன தேரரைக் கைது செய்யுமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையப் பொறுப்பதிகாரி, பதில் பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டமை தவறான ஒரு தீர்மானமாகும். இதனை அவர் திருத்திக் கொள்ள வேண்டும்.

குண்டுத்தாக்குதல் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் விசாரணைகள் பல காணப்படுகின்றன, ஆனால் இதுவரையில் யார் குற்றவாளி என்பது அறியப்படவில்லை என்று பேராயர் கர்தினால் மல்கம் ஆண்டகை குறிப்பிட்டுள்ளமையில் உண்மைத்தன்மை காணப்படுகின்றது. கர்தினாலின் கருத்தை முழுமையாக வரவேற்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புகழ் மயக்கம்

புகழுக்கு மயங்காதவர்கள் யாரு இந்த உலகத்திலே? ஒருத்தரைப் பார்த்து இன்னொருத்தர் சொன்னார்.

சேர்! இந்த உலகத்தில் புகழுக்கு மயங்காதவர்கள் நீங்கள் ஒருத்தர்தான் சேர்! என்றார்.

இதைக் கேட்டதும் அவர் அப்படியா? மிகவும் நன்றி என்று சொல்லி அசடு வழிந்தார். அப்படி என்றால் என்ன அர்த்தம்? அதற்கே அவர் மயங்கிவிட்டார் என்று அர்த்தம்.

இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த இரண்டு பேரில் ஒருவரிடம் பணம் அதிகமாக இருந்தது.

இன்னொருவரிடம் அறிவு அதிகமாக இருந்தது. இது இரண்டும் ஒரே இடத்திலே இருக்கிறது தான் அபூர்வம்.

பணம் அதிகமாக வைத்திருக்கின்றாரே... அவருக்கு ஒரு ஆசை. யாராவது தன்னைப் புகழ மாட்டாரா என்று!

பக்கத்திலே இருக்கின்ற அறிவாளியோ மிகவும் ஏழை! பார்த்தார் அவர்!

சரி இவரிடம் காசு கொடுத்தாவது நம்மைப் புகழ வைப்போம் என்று நினைத்தார். அந்த ஏழையைப் பார்த்து சொன்னார்.

இதோ பார் என்னிடம் ஆயிரம் பொற்காசுகள் இருக்கின்றன. அதிலே ஒரு நூறு பொற்காசுகளை உன்னிடம் கொடுக்கின்றேன். நீ கொஞ்சம் என்னைப் புகழ்ந்து பேச வேண்டும்! செய்வாயா? என்று கேட்டார்.

இது நேர்மையான பங்கீடு இல்லை. நீங்கள் பங்கு போடுவதில் நேர்மை இல்லாததனாலே நான் உங்களைப் புகழ்ந்து பேச மாட்டேன் என்றார்.

அப்படியா சொல்கின்றாய்? சரி அப்படியென்றால் ஆளுக்குப் பாதியாக எடுத்துக் கொள்வோம். என்னிடம் இருக்கின்றது 1000. இதிலே உனக்க 500. எனக்கு 500 இப்படிப் பிரித்துக் கொள்வோம். இப்பொழுது என்றாலும் கொஞ்சம் என்னைப் புகழ்ந்து பேசுவாயா? என்று கேட்டார். இவர் பார்த்தார்.

என்னிடம் 500. உங்களிடம் 500 இருந்தால் நாம் இரண்டு பேரும் சமன் என்று தான் அர்த்தம்.

அப்படியிருக்கும் போது எனக்குச் சமனாக பணம் வைத்திருக்கின்ற உங்களை நான் எப்படி புகழ்ந்து பேச முடியும்? என்றார்.

சரி நான் வைத்திருக்கின்ற அனைத்தையும் உன்னிடம் கொடுத்து விட்டால் என்னைப் புகழ்ந்து பேசுவாயா? என்று கேட்டார்.

நீங்கள் உங்களிடம் இருக்கின்ற எல்லாவற்றையும் கொடுத்து விட்டால் நான் செல்வந்தன் ஆகிவிடுவேன். நீங்கள் ஏழை ஆகிவிடுவீர்கள். செல்வந்தனான நான் ஒன்றும் இல்லாத ஏழையாகிய உங்களை எப்படிப் புகழ்ந்து பேசுவேன்? என்றார்.

அதுவும் நியாயம் தான்! ஒன்றுமில்லாதவனைப் புகழ்ந்து என்ன ஆகப் போகின்றது?

இப்பதான் அந்தப் பெரிய மனிதன் யோசித்தார். நாம் என்ன செய்தாலும் இந்த ஏழையின் வாயில் இருந்து புகழ் மொழிகளை வாங்க முடியாது என்று புரிந்து கொண்டார்.

புகழ் மொழிகளை விலைக்கு வாங்க முடியாது. அப்படி வாங்க வேண்டும் என்று நினைத்தால் அதனாலே எந்தப் பயனும் இல்லை.

புகழ் என்பது தானாக வந்து சேர வேண்டும் என்றால் அதற்குத் தகுந்த மாதிரி நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். அதுதான் முறை.

அதை விட்டு விட்டு காசு கொடுத்து புகழ வைப்பதோ கடதாசியிலே அச்சடித்து சுவரிலே ஒட்டுவதோ எத்தனை நாளுக்கு நிலைக்கும் என்று நினைக்கின்றீர்கள்?

ஒருத்தர் அப்படித் தான் ஒரு சுவரிலே ஒரு பெரிய போஸ்டரை ஒட்டிக்கொண்டிருந்தார். அருகில் போய் அந்த போஸ்டரிலே என்ன எழுதி இருக்கின்றதுஎன்று பார்த்தேன்.

பிறந்த நாள் காணும் பெரியவரே நீங்கள் வாழ்க பல்லாண்டு! என்று எழுதியிருந்தது. நான் அந்த ஆளைப் பார்த்து,

ஏங்க நீங்க பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்க வேண்டும் என்றால் நேராக அந்தப் பெரியவரையே பார்த்து சொல்லக் கூடாதா? இப்படி இந்தச் சுவரிலே உங்கள் வாழ்த்தை பசை தடவி ஒட்டுகின்றீர்களே... நீங்கள் இங்கே இப்படி ஒட்டுவது அந்தப் பெரியவருக்குத் தெரியுமா? என்று கேட்டேன்.

தெரியும்! என்றார்.

எப்படி? என்றேன்.

அந்தப் பெரியவரே நான் தானே! என்றார் அந்த ஆள்!

# அவசரகாலச் சட்டத்தை நீடித்தாலும் பரவாயில்லை ஸ்திரமற்ற அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்



## நாடாளுமன்றில் சுசில் சுட்டிக்காட்டு

அவசரகாலச் சட்டத்தை நீடித்தாலும் பரவாயில்லை இந்த ஸ்திரமற்ற அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜெயந்த சுட்டிக்காட்டினார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதம் நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் தற்போது இருக்கும் நிலையற்ற அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இவர்கள் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை அடுத்து மக்களுக்கான பாதுகாப்பை வழங்க எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

தாக்குதல் இடம்பெற்று தற்போது இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ளன. ஆனால்இதனை காரணம் காட்டி மக்களுக்கான உரிமையைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தயங்குகின்றது.

தேர்தலை நடத்தவும் இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதற்கும் தாக்குதலையே இந்த அரசாங்கம் காரணம் காட்டுகின்றது. அவசரகாலச் சட்டத்தை நீடித்தாலும் பரவாயில்லை. இந்த ஸ்திரமற்ற அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. மேலும் அவசரகாலச் சட்டத்தை கொண்டு சாதாரண மக்களை எந்த நிலையிலும் துன்புறுத்தக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு" என சுசில் பிரேம ஜெயந்த மேலும் தெரிவித்தார். (இ-7)



# இப்ராஹீமுக்கு பயங்கரவாதிகளுடன் தொடர்பா? என்னால் இன்னும் நம்பமுடியவில்லை

## வணிக அமைச்சின் செயலாளர் சாட்சியம்

(கொழும்பு)

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட நபர்களுக்கு உதவ வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. இப்ராஹீம் விடயத்தில் தாக்குதலின் பின்னர் தான் அவர் மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அவருக்கு பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பு இருப்பதாக என்னால் இன்னும் நம்ப முடியவில்லை என வணிக அமைச்சின் செயலாளர் நீல் ரஞ்சித் அசோக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் அவர் மேலும் சாட்சியமளிக்கையில்,

கேள்வி:- கைத்தொழில் அபிவிருத்திச் சபையினூடாக பயங்கரவாதிகளுக்கு கழிவு இரும்புகள் வழங்கப்பட்டமை தொடர்பில் குற்றம்சாட்டப்படுகிறது இது உண்மையா?

பதில்:- குற்றம்சாட்டப்படும் கொலோசஸ் கம்பனி 2011 இல் பதிவு செய்யப்பட்டது. குறித்த கம்பனி அண்மையில் தமது பணிப்பாளர் சபையை மாற்றியுள்ளது. கழிவு இரும்பு வகைகளை மீள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் இது பிரதான நிறுவனமாகும். இவர்களிடமுள்ள இயந்திரங்களினூடாக 11 ஆயிரம் கிலோ கழிவு இரும்புகளை உருக்க முடியும். அதிகம் கழிவு இரும்புகளைக் கொண்டு உற்பத்தி செய்வதால் இந்த நிறுவனத்திற்குக் கூடுதல் கழிவு இரும்புகள் வழங்கப்படுகின்றன. குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் மேலதிக செயலாளர் அடங்கலான மூவர் கொண்ட குழுவினூடாக விசாரணை நடத்தினோம். இந்தக் கம்பனியின் வருடாந்த தேவை 1200 மெற்றிக் தொன்னாக உள்ளது. பாதுகாப்பு அமைச்சினூடாக ஒதுக்கும் வெற்று ரவைகள் கோரப்பட்டிருந்தன. அவை சேதமாக்கப்பட்டு வழங்கப்பட்டன. இரு தடவைகளே அவை கிடைத்தன.

கேள்வி:- குறித்த கம்பனிக்கு கழிவு இரும்புகளை வழங்குமாறு யாராவது கோரினார்களா?

பதில்:- இல்லை. கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயனாளர் நியமிக்கும் குழு என்பவற்றின் அனுமதியின் பின்னரே கழிவு இரும்பு வழங்கப்படும்.

கேள்வி:- சதொச வாகனங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டது? இதன் உண்மைத்தன்மை என்ன?

பதில்:- இது தொடர்பில் மேலதிக செயலாளர் ஊடாக விசாரணை நடத்தினேன். அந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது.

கேள்வி:- இது தொடர்பில் அவமதிப்பு வழக்குத் தொடர முடியாதா?

பதில்:- அது யதார்த்தமாகாது. என்னை அவமதித்து செய்தி வெளியிட்டாலும் மௌனமாக இருப்பேன். அமைச்சருக்கு எதிராக தினமும் செய்திகள் வெளியாகும்.

கேள்வி:- இப்ராஹீமின் நிறுவனத்திற்கு அதிக வெற்று ரவைகள் வழங்கப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்குமாறு அமைச்சரோ வேறு யாராவதோ அழுத்தம் வழங்கியுள்ளனரா?

பதில்:- இல்லை. சிலர் குறித்த நிறுவனத்திற்கு வழங்குமாறு பரிந்துரை வழங்கி கடிதம் அனுப்பியுள்ளனர். ஜனாதிபதி செயலகத்தில் இருந்தும் 500 மெற்றிக்தொன் வழங்குமாறு கடிதம் வந்தது. ஆனால் எம்மிடம் போதியளவு மூலப் பொருட்கள் கிடையாது. சாந்த பண்டார எம்.பியும் அவ்வாறு கடிதம் வழங்கியுள்ளார். கொலோசஸ் கம்பனிக்கு வழங்குமாறு கோரப்பட்டாலும் எந்த அழுத்தமும் வழங்கப்படவில்லை.

கேள்வி:- இப்ராஹீமுக்கு பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பு எனக் கூறப்படுகிறது. இதன் உண்மைத்தன்மை என்ன?

பதில்:-அவர் அமைச்சருடன் பேச்சு நடத்தியதாக ஊடகங்கள் கூறின. அவர் வறிய நிலையில் இருந்து உயர் நிலைக்கு வந்தவர். அவருடன் நான் தொடர்புபட்டு செயற்பட்டது கிடையாது. எம்முடன் தொடர்புபட்டுள்ள வர்த்தகர்களில் முஸ்லிம்கள் அதிகம். அதைத் தவிர எனக்கு எதுவும் தனிப்பட்ட முறையில் தெரியாது.

கேள்வி:-பயங்கரவாத நடவடிக்கைக்கு உங்கள் அமைச்சு உதவியுள்ளதா?

பதில்:- இல்லை. அவ்வாறு தெரிந்தால் உதவ மாட்டோம். இப்ராஹீம் விடயத்தில் தாக்குதலின் பின்னர் தான் அவர் மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டு வந்தது. நான் இன்னும் அவருக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தொடர்பு இருப்பதாக நம்பவில்லை. கைத்தொழில் அபிவிருத்திச் சபை கோரிய பின்னர் இரு தடவைகள் பாதுகாப்பு சபை பழைய வெற்று ரவைகள் வழங்கியது. 2017 இல் தான் முதன்முறை இராணுவம் வழங்கியது.

கேள்வி:- இன்சாப் இப்ராஹீம் அமைச்சு வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளாரா?

பதில்:-இல்லை. அவர் பொருளாதார ரீதியில் பலவீனமானவரல்ல. அவருக்கு எமது வாகனங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

கேள்வி:- பிரதேச சபை உறுப்பினர் அப்துல் ஹலான் என்பவர் அமைச்சின் இணைப்புச் செயலாளராகச் செயற்பட்டுள்ளாரா?

பதில்:- இல்லை.

கேள்வி:-அமைச்சின் ஆலோசகராக மௌலவி ஒருவர் இருந்தாரா?

பதில்:- இல்லை. நான் செயலாளராக வந்த பின்னர் அவ்வாறு யாரும் இருக்கவில்லை.

கேள்வி:- தாக்குதலுக்கு பயன்படுத்திய மூலப்பொருட்களும் கைத்தொழில் அபிவிருத்தி சபை வழங்கிய மூலப்பொருட்களுக்கும் தொடர்பு உள்ளதா என்று தெரியுமா?

பதில்:- பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இது தொடர்பில் எழுத்துமூலம் வினவியுள்ளோம். இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

கேள்வி:- இப்ராஹீமுக்கு உதவுமாறு முன்னாள் அமைச்சர் றிசாத் கோரியுள்ளாரா?

பதில்:- ஒருபோதும் இல்லை.

கேள்வி:- கொலன்னாவ கைத்தொழிற்சாலை சுற்றிவளைப்பை புலிகள் ஆயுதக் களஞ்சியத்தை சுற்றிவளைத்தது போன்று ஊடகங்கள் காண்பித்தன அதுபற்றி?

பதில்:- அங்கு வேறு என்ன நடந்துள்ளது என்று தெரியாது. நாம் வழங்கிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி வெடி பொருட்கள் உருவாக்கப்பட்டதா? என்பதை இராணுவம் இதுவரை உறுதி செய்யவில்லை.

கேள்வி:- சதொச வாகனங்களில் இருக்கும் ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தைக் கொண்டு அவை பயங்கரவாத நடவடிக்கைக்குப் பயன்படுத்தியுள்ளதாக உறுதியாகியுள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது?

பதில்:- அந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித்தான் விசாரணை நடத்தினோம். அவை பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை. குறித்த தினம் குறித்த இடத்திற்கு அவை பயணம் செய்யவில்லை.

கேள்வி:- றிசாத் உத்தியோக பூர்வ வாகனத்தை மீளக் கையளித்துள்ளாரா?

பதில்:- ஆம். இரண்டு தடவை அமைச்சுப் பதவி வகிக்காத நிலையில் மறுநாளே அவற்றை கையளித்தார். இம்முறையும் அவ்வாறே வழங்கினார் எனத் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை அணி வெற்றிபெற்ற இன்ப அதிர்ச்சியில் மயங்கிய இளைஞன் பரிதாபமாக உயிரிழந்த சோகம்!

(அம்பாறை)

இலங்கைக் கிரிக்கெட் அணி, கடந்த காலங்களில் தொடர் தோல்விகளுக்கு முகங்கொடுத்து வந்தது. இந் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போட்டியின் திடீர் வெற்றியால் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி திரில் வெற்றியை பதிவு செய்தது. இலங்கை அணியின் வெற்றியால் ஏற்பட்ட மகிழ்ச்சியை தாங்கிக்கொள்ள முடியாமல் இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அனைவர் மத்தியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தச்சம்பவம் அம்பாறை, தமன பிரதேசத்தில் இடம்பெற்றது. 26 வயது ரத்நாய்க்க முதியன்செலாகே சயான் மது ஷங்க என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

இங்கிலாந்து-இலங்கை அணிக்கான போட்டி இடம்பெறுவதற்கு முன்னர் நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடிய இளைஞன், மகிழ்ச்சியுடன் வீடு சென்றார்.

பின்னர் தொலைக்காட்சியில் கிரிக்கெட் போட்டியைப் பார்த்துள்ளார்.

போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றவுடன், குறித்த இளைஞன் மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

இலங்கை அணியின் வெற்றியால் ஏற்பட்ட அதீத சந்தோசமே உயிரிழப்புக்குக் காரணம் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நெடுக்குளம் வீதி மூடுவதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் கொழும்புத்துறை (505) நெடுக்குளம் வீதியை மூடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் காலை அப் பகுதி மக்கள் ஒன்றுகூடினர்.

யாழ்.மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட குறித்த வீதி தனியார் ஒருவருடைய காணியை ஊடறுத்துச் செல்வதாகத் தெரிவித்து அவ் வீதி மூடப்படுவதாக அப் பகுதி மக்கள் குற்றம்சாட்டினர். குறித்த வீதியைப் புனரமைக்க யாழ்.மாநகர சபையே நிதி வழங்கிவிட்டு தற்போது மூடுமாறு உத்தரவிடுவது எவ் விதத்தில் நியாயமாகும் என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில் யாழ்.மாநகரசபை முதல்வரைத் தொடர்பு கொண்ட போது குறித்த வீதியை உப பிரிவின் மூலம் சபை அங்கீகரித்தமை தவறென நகர திட்டமிடல் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிடம் இருந்து வந்த உத்தரவுக்கமையவே குறித்த வீதியை மூட உத்தரவிட்டதாகத் தெரிவித்தார். (5-10)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# தொழில்நுட்ப போதை (Technology Addiction)

தொழில்நுட்பத்தில் நேரததைச் செலவிடுவதால் ஏற்படும் உளவியல் விளைவுகளைப் பற்றி மக்கள் எவ்வாறு கவலைப்பட வேண்டும்?

அன்றாட வாழ்க்கையின் மற்றைய அம்சங்களுடன் தொழில்நுட்ப பயன்பாடுகளை சமநிலைப்படுத்துவது தொடர்பாக பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. உலக சுகாதார அமைப்பினால் சமீபத்தில் "விளையாட்டு குறைபாடு (gaming disorder) மற்றும் போதைப் பொருள் ஒழுங்கீனம் (addictive behaviour disorder)"என்ற தலைப்பில் நடத்தப்பட்ட விவாதம் மற்றும் இது போன்ற பல விவாதங்கள் "தொழில்நுட்ப போதைக்கு (technology addiction)" எதிராகப் போராடுவனவாக உள்ளன.

மேலும் கேட்டி கோரிகின் என்ற தொலைக்காட்சியில் ஏப்ரல் 2018இல் மக்களின் மூளையில் தொழில்நுட்பத்தின் விளைவுகளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட "அமெரிக்கா இன்சைட் அவுட்" என்ற நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பிரபல நிறுவனத்தின் இணை இயக்குநர் தொழில்நுட்ப போதைப்பழக்கத்தை மிகவும் பாரதூரமான கொக்கெய்ன் மற்றும் பிற போதைப் பொருட்களுக்கு அடிமையாகுவதற்கு சமமாக ஒப்பிட்டார். மேலும் இந்த நிகழ்ச்சி தொழில்நுட்ப பயன்பாடு "அல்சைமர்" நோயைப் போன்ற நினைவக இழப்பு நோய்க்கு வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டியது.

அதேபோல் உளவியலாளர் "ஜீன் ட்ரேங்கே" கட்டிளமைப் பருவ தற்கொலைகளுடன் ஸ்மார்ட் போன்களை தொடர்புபடுத்தியிருக்கிறார். ஆனாலும் இளைஞர்களுடனும் குடும்பத்தினருடனும் பணிபுரிந்த ஒரு உளவியலாளர், தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் வீடியோ கேம்ஸ் பற்றி நடத்திய ஆராய்ச்சி தொழில்நுட்பம் பற்றிய இப்பயம் நிறைந்த கூற்றுக்கள் மிக அவசியமற்றவை என்றும் அவை பலவீனமான தரவுகளை அடிப்படையாகக் கொண்ட கருத்துகள் என்றும் குறிப்பிடுகிறார்.

மேலும் அவர் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளில் பல மூட நம்பிக்கைகள் காணப்படுகின்றன என்றும் அவை உண்மையான ஆராய்ச்சிகளின் மூலம் தணிக்கை செய்யப்படல் அவசியம் என்றும் குறிப்பிடுகிறார்.

### தொழில்நுட்பம் ஒரு போதைப்பொருள் அல்ல

தொழில்நுட்பமானது கொக்கெய்ன், ஹெரோயின் மற்றும் மெத்தம்பேடமைன் போன்றன மூளையில் செயற்படுத்தும் அதே இன்ப மையங்களை தூண்ட வல்லது என சிலர் கூறுகின்றனர்.

ஆனால் அது தெளிவற்ற உண்மை. மூளையின் இன்ப மையத்தில் நீந்துதல், நல்ல புத்தகம் படித்தல், நல்ல உரையாடல்கள் மற்றும் சாப்பிடுதல் போன்ற சாதாரண செயற்பாடுகள் மூலம் டோபமைன் வெளியீடு அதிகரித்தல் அவதானிக்கப் பட்டுள்ளது. தொழில்நுட்ப பயன்பாடு காரணமாக சாதாரண செயற்பாடுகளிலும் பார்க்க 50-100 சதவீதம் அதிக டொபமைன் வெளியிடப்படல் அவதானிக்கப் பட்டுள்ளது. ஆனால் கொக்கெய்ன் பாவனையின்போது டோபமைன் 350 சதவீதம் அதிகரிக்கிறது. அதேபோல் மெத்தம்பேடமைன் பாவனையின்போது 1,200 சதவீதம் அதிகரிக்கிறது.

### தொழில்நுட்ப போதை ஒரு பொதுவானது அல்ல

பெரும்பாலும் தொழில்நுட்ப பாவனைக்கு எதிராக குரல் கொடுப்போர் ஸ்மார்ட்போன்கள் குழந்தைகளை தமக்கு அடிமையாக்குகின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைக்கிறார்கள். சில கடந்தகால ஆராய்ச்சிகளின் படி மூன்று அல்லது அதற்கு குறைவான சதவீதமான தொழில்நுட்ப பாவனையாளர்களே சிக்கலான நடத்தைகளான வகுப்புகளைப் புறக்கணிப்பது மற்றும் பரீட்சை புள்ளிகளில் பாதிப்படைவது போன்ற நடத்தைகளைக் கொண்டுள்ளார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இப் பிறழ்வான நடத்தைகளில் பெரும்பாலானவை சாதாரணமானவை, காலப்போக்கில் தங்களைத் தாங்களே சீர்செய்யக்கூடியனவாகவே காணப்படுகின்றன.

### தொழில்நுட்ப பழக்கம் ஒரு மனநோய் இல்லை

ஜூன் மாதம் 2018 இல், உலகளாவிய சுகாதார அமைப்பு அதன் சர்வதேச நோய்களுக்குள் "விளையாட்டுக் குறைபாட்டையும் (gaming disorder)" சேர்க்கிறது. ஆனால் அது மிகவும் சர்ச்சைக்குரிய முடிவு. அறிஞர்கள் பலர் உலக சுகாதார நிறுவனத்துக்கு எழுதிய கடிதத்தில் இந்த முடிவு விஞ்ஞான பூர்வமாக ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என குறிப்பிட்டிருந்தார்கள். மேலும் "விளையாட்டுக் குறைபாடு" என்பது உடற்குறைபாடு மற்றும் மன அழுத்தம் போன்ற மனநல பிரச்சினைகளுக்கான அறிகுறி என குறிப்பிடுகிறார்கள்.

உலக சுகாதார நிறுவனத்தின் இணை அமைப்பான "யுனிசெப்" கூட குழந்தைகள் திரைகளை (தொலைபேசி மற்றும் கணனி) பயன்படுத்துவதை "போதை" மொழியைப் பயன்படுத்துவதாக குற்றம் சாட்டுவதை எதிர்க்கிறது.

தற்போதைய தர்வுகள், தொழில்நுட்பத்தை போதையாக விபரிப்பதற்கு போதுமானவையாக இல்லை. உதாரணமாக, Oxford பல்கலைக்கழக ஆராய்ச்சி முடிவுகளின்படி விளையாட்டுக் குறைபாட்டை (gaming disorder)" உடையவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் மற்றையவர்களுடன் ஒப்பிடுகையில் குறைவான உள நலப் பிரச்சினைகளை கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

மேலும் அதிகளவு ஆராய்ச்சி முடிவுகளின்படி அதிக தொழில்நுட்ப பாவனையாளர்களுக்கு ஏற்படக்கூடிய உள பிரச்சினைகள் அதிகளவு பாரதூரமற்றனவாகவும் வழக்கமான சிகிச்சையின்றி தாமாகவே குணமடையக் கூடியனவாகவுமே காணப்படுகின்றன.

### "தொழில்நுட்ப போதை" தொழில்நுட்பம் காரணமாக ஏற்பட்டதில்லை

தொழில்நுட்ப போதை பற்றிய விவாதங்களில் பெரும்பான்மையானவை தொழில்நுட்பம் மனித மூளைக்கு தீங்கு விளைவிக்கிறது என்று தெரிவிக்கப்படுகின்றது. உண்மையில் தொழில்நுட்ப போதையானது மன அழுத்தம், பதற்றம் மற்றும் கவனக்குறைவு போன்ற உளப் பிரச்சினைகளுக்கான குறைபாடுகளுக்கான அறிகுறியாகவே காணப்படுகின்றது. இதற்கு சிகிச்சையளிக்கும்போது, யாருக்கு, என்ன நிலைமைகளில் சிகிச்சை தேவைப்படும் என்பதை கருத்தில் கொள்வது முக்கியமாகும். இதற்கு சிகிச்சையளிக்க முயற்சிக்கும் போது அறிகுறியைக் காட்டிலும் உண்மையான காரணத்தையறிந்தே சிகிச்சையளிக்கப்பட வேண்டும்.

### தொழில்நுட்பம் ஒரு தனித்துவமான அடிமை அல்ல

சில மனிதர்கள் தொழில்நுட்பத்தை அதிகளவு பயன்படுத்துகிறார்கள். அதேபோல் சிலர் உடற்பயிற்சி,உணவு, பாலியல், வேலை, மதம் மற்றும் சொப்பிங் போன்ற செயற்பாடுகள் ஏதாவற்றில் அதிகளவில் ஈடுபடுகின்றனர். எனினும் தொழில்நுட்பத்தின் அதிகளவிலான பாவனை தொடர்பான தகவல்கள் மற்றையவற்றுடன் ஒப்பிடும் போது குறைவாகவே காணப்படுகின்றன

### தொழில்நுட்ப பயன்பாடு தற்கொலைக்கு வழிவகுக்காது

இளம் பெண்கள் மத்தியில் தற்கொலை விகிதங்கள் அதிகரித்தல் சமீபத்திய தொழில்நுட்ப வளர்ச்சிக்கான சான்றுகளாக சில சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் தற்கொலை விகிதம் கிட்டத்தட்ட அனைத்து வயதினரிலும், குறிப்பாக நடுத்தர வயதினரிடையே அதிகரித்து காணப்படுகின்றது. இவ் அதிகரிப்பிற்கு 2008 ற்கு பின் ஏற்பட்ட நிதி நெருக்கடியே உண்மையான காரணமாக காணப்படுகின்றது.

இளம் வயதினரின் மனச்சோர்வு மற்றும் தற்கொலைக்கும் திரை (தொலைபேசி மற்றும கணனி) பயன்பாட்டிற்கும் தொடர்புள்ளதாக சமீபத்திய ஆராய்ச்சி கூறுகிறது. ஆனால் அதே தரவுகளுடன் வேறு ஒரு ஆராய்ச்சி உருளைக்கிழங்கு உண்பதுக்கும், தற்கொலைக்குமான தொடர்பை விட இது பெரிதல்ல எனக் கூறுகிறது.

இது ஒரு பிரச்சினையாகும்: அறிவாளிகள் சில நேரங்களில் சிறிய புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு பயங்கரமான கூற்றுக்களைச் சொல்லிவிடுகின்றார்கள்.

தனியாள் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய உண்மையான சிக்கல்கள் நிச்சயமாக காணப்படுகின்றன. மக்கள் தங்கள் வாழ்க்கையின் மற்ற அம்சங்களுடன் தொழில்நுட்ப பயன்பாட்டை சமநிலையில் வைத்திருக்க பழக்கப்படுத்தல் வேண்டும்.மேலும் அதிக பயன்பாட்டினையுடைய மிகச் சிறிய சதவீதத்தினரையும் கண்காணிப்பதன் மூலம் தொழில்நுட்பத்தின் பயன்களை சந்தோசமாக அனுபவிக்க முடியும்.

நீங்கள் தொழில்நுட்பத்தை அதிக பயன்பாட்டுக்கு கொண்டு வரும் தனிநபர்களானால் இங்கே உங்கள் தொழில்நுட்ப பயன்பாட்டை கட்டுப்படுத்த ஐந்து வழிமுறைகள் உள்ளன:

1. உங்கள் செயற்பாடுகளிற்கு புத்துயிர்ப்பு அளித்தல் - மிக அடிப்படை மட்டத்தில், தொடர்ச்சியான தொழில்நுட்ப நுகர்வு மூலமான பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கு, பழைய பழக்கங்களை புதிதாக மாற்ற வேண்டும்.

எனவே, உங்கள் தொலைபேசியை சோதனை செய்வதற்குப் பதிலாக, வாசிப்பு, தியானம் மற்றும் சுவாரஸ்யமான நடத்தைகளை மேற்கொள்ளலாம்.

2. தொழில்நுட்ப போதை நீக்கக் காலம் - தொழில்நுட்ப போதை நீக்கக் காலங்களை தெரிவு செய்து முதலில் சில மணி நேரம் பின்னர் நாட்கள் என தொழில்நுட்பத்தை அணுகுவதை குறைத்தல். ஒவ்வொரு நாளும் ஒரு சிறிய காலத்திற்கு அணுகுவதை குறைத்தல் மூலம் ஆரம்பிக்க முடியும், பின்னர் இணையத்தைப் பயன்படுத்தாமல் முழு நாட்கள் அல்லது வார இறுதிகளில் செலவழித்தல்.

3. மின்னஞ்சல் மற்றும் சமூக ஊடக வரம்புகள் - பல தகவல் தொடர்பு சேவைகள் தொடர்ந்து புதிய தகவல்களுடன் மேம்படுத் தப்பட்டு வருகின்றன, எப்போது, எங்கு இந்த பயன்பாடுகளைச் சரிபார்க்க வேண்டும் என்பது முக்கியம்.

உதாரணமாக, ஒரு நாளைக்கு ஒருமுறை சமூக ஊடகத்தை சோதித்துப் பார்க்கவும், மின்னஞ்சல்களை சரிபார்க்கவும் குறிப்பிட்ட நேரத்தை அமைக்கவும்.

இது முதலில் சங்கடமானதாக இருக்கும்போதும், நீங்கள் விரைவாக புதிய செயல்முறையில் மாறினீர்களேயானால் ஒரு நாளில் எவ்வளவு அதிகமாக வேலை செய்யலாம் என்பதையிட்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

4. ஒரு சகபாடியை இணைத்துக் கொள்ளல் - கெட்ட பழக்கத்தை துரத்தியடிப்பதற்கு நீங்கள் பொறுப்புடன் இருக்க உதவுவதற்கு ஒரு சகபாடி இருப்பது எப்போதும் நல்லது.

இது வேலையில் ஒரு நண்பனாகவோ, உங்கள் மனைவியாகவோ, ஒருவேளை உங்கள் சகோதரர் அல்லது நண்பராகவோ இருக்கலாம். உங்களை சரியான பாதையில் கொண்டுசெல்வதற்கு நம்பகமான ஒருவரை கண்டுபிடியுங்கள்.

5. உங்கள் வெற்றிகளைக் கொண்டாடுங்கள் - மாற்றங்களை மாற்றுவது கடினமாக இருக்கலாம். ஆனால் நீங்கள் வெற்றியடையும்போது, உங்கள் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இல்லை தொழில்நுட்பத்திற்கான அதிக அணுகல் இல்லை என்பதை இயற்கையில் அதிக நேரத்தை செலவிடுவதன் மூலம் உடற்பயிற்சிக்கான நேரத்தை எடுத்துக் கொள்வதன் மூலம் அல்லது நண்பர்களுடனும் குடும்பத்தினருடனும் நேரத்தை செலவிடுவதன் மூலம் உங்களை வெகுமதியுங்கள்.

வெகுமதி நீங்கள் எந்த தொழில்நுட்ப அனுபவம் அல்லாத அனுபவமாக இருக்கும். மேலும் நீங்கள் அந்த செயல்களைச் செய்யும்போது, நீங்கள் தொழில்நுட்பத்தை ஒரு சிறிய அளவில்தான் இழக்கிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

தொழில்நுட்ப பாவனை தொடர்பாக எமது மக்கள் மத்தியில் பல்வேறு வகையான குற்றச்சாட்டுகளும் பயங்களும் காணப்படுகின்றன. அவற்றை முற்றுமுழுதாக ஏற்கவும் முடியாது மறுக்கவும் முடியாது. எனினும், தொழில்நுட்பத்துடனான எமது உறவானது நேர்வு செய்யப்பட்டதாகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் காணப்படும் போது நிச்சயமாக நன்மை பயப்பதாகவே காணப்படும்.

திரு.வி.வினோகரன்
போதனாசிரியர்,
கணனி அலகு,
யாழ்.பல்கலைக்கழகம்.
மூலம்: Theconversation.com

# இலங்கையில் தமிழர்

**ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)**

கலாநிதி மு.குணசிங்கம்

285

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதவான்களான ஓ.எல்.டி. கிறெஸ்ரர், வி.மாணிக்கவாசகர், தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆயர் சபாபதி குலேந்திரன் ஆகியோர் அங்கம் வகித்த சுதந்திர ஆணைக்குழுவினர் இந்தத் தாக்கு தலைக் கண்டித்துள்ளனர்.

மேலும் பொலிஸ் அதிகாரி ஒருவர் மின்சாரத் தொடுப்பு ஒன்றின் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையால் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்த மக்களில் ஒன்பது பேர் மரணித்ததாகவும் இவ் ஆணைக்குழு அறிவித்தது.

எதிர்பார்க்கப்பட்டவாறே இதை யிட்டு எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காமையால் கொதிப்படைந்த தமிழ் இளைஞர் அதன் பின்னரே ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

பிரதான தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் திருகோணமலையில் 14 மே 1972 அன்று மகாநாடு ஒன்றைக் கூட்டிய போது நம்பிக்கையிழந்த நிலையில் இருந்து தமிழ் இளைஞர் தமது பலத்த ஆதரவை அவர்களுக்கு வழங்கினர். இங்கு தமிழர் ஐக்கிய முன்னணி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.



சேர். ஜோன். கொத்தலாவல

இதில் சௌ. தொண்டைமானின் கட்சியாகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்தமை குறிப்பிடகூடிய அம்சமாகும். மேலும் ஜி.ஜி. பொன்னம்பலம் பல வருடங்களாக தமிழரின் அபிமானத்திற்குரிய தலைவராகவும், சக்திவாய்ந்த பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் விளங்கிய எம்.சிவசிதம்பரம், வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் தா.சிவசிதம்பரம் ஆகியோரை உள்ளடக்கிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் இதில் இணைந்து கொண்டது.

இச்சந்தர்ப்பத்தில்கூட தமிழ் அரசியல் தலைவர்கள் சமஷ்டி முறையில் அமைந்த மத்திய நிர்வாகமுறை அற்றோர் ஆட்சியைக் கோரிய போதும் தமிழ் இளைஞர் தமிழருக்கு தனியான தேசம் நிறுவப்பட வேண்டுமென வலியுறுத்தினர்.

எம். சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், இருவருமே 1970 பொதுத் தேர்தலில் தமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்ததன் விளைவாக முழுநேரமும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று தமிழரின் அரசியல் நிலைப்பாட்டைத் தமிழ் மக்களுக்குப் புரியவைத்தனர்.

ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தமது அரசியல் நிலைப்பாட்டை மிகவும் தெளிவாக எடுத்து விளக்கினர். ஆனால் சிங்களப் பெரும்பான்மை அரசு தமிழ் அரசியல் தலைவர்களின் கோரிக்கையை நிராகரித்தது. தமது அரசியற் திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதில் விடாப்பிடியாக இருந்தது.

அரசியலமைப்பு பேரவை (Constituent Assembly) தமிழர் கூட்டணியின் தீர்மானத்தை ஆராயாமல் ஒதுக்கும் பட்சத்தில் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முடிவை எடுக்கின்ற அதிகாரத்தையும் அந்த முடிவையிட்டு அரசியலமைப்புச் சபைக்கும் கட்சியின் அங்கத்தவருக்கும் அறிவிக்கும் பொறுப்பையும் கூட்டணியின் தலைவர் செல்வநாயகத்திடமே வழங்க வேண்டுமென 21 ஜூன் 1971 இல் யாழ்ப்பாணத்தில் கூட்டப்பட்ட கட்சி பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர் விடயங்கள் தீவிரமடைய தமிழர் பிரிந்து செல்வதற்கான யுத்தத்தை நோக்கி விரைந்தனர். இப் புதிய அரசியல் திட்டம் பற்றிச் சுருக்கமாக ஏற்கனவே குறிப்பிட்ட போதிலும் அதில் உள்ள முக்கியமான அம்சம் தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக அதிகபட்ச விரக்தியிலும், வெறுப்பிலும், ஆத்திரத்திலும் அது ஆழ்த்தியது என்பதாகும்.

அதாவது இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த இலங்கை என்ற பெயரை மாற்றி சிறீலங்கா என்ற புதிய பெயரை மேற்படி அரசியல் திருத்தச் சட்டம் மூலம் அரசு அமுல்படுத்தியது. சிறீலங்கா என்ற பெயர் சிங்கள இனத்தோடும், சிங்கள மொழியோடும் அதிக பிணைப்பைக் கொண்ட ஒரு சொற்பதமாகும்.

எனவே இலங்கை என்பது சிங்கள மக்களுக்குத்தான் சொந்தமானது தமிழருக்கு இங்கு இடமில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இவற்றின் விளைவாக தமிழ்த் தலைவர்கள் தமது அரசியல் எதிர்காலத்தையிட்டு ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டியதொரு இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டனர்.

செல்வநாயகம் 2 ஒக்டோபர் 1973 அன்று தேசிய அரச பேரவையிலிருந்து தனது பிரதிநிதித்துவத்தை இராஜினாமா செய்து அங்கு அரசாங்கத்துக்கு ஒரு சவால் விடுத்தார்.

தனது பதவி விலகலால் நடைபெறும் இடைத்தேர்தலில் அரசின் இந்தப் புதிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்கின்றனரா? அல்லது நிராகரிக்கின்றனரா? என்பதை அறிவதற்கு தனக்கு எதிராக அரச சார்பில் ஒரு அபேட்சகரை நிறுத்த வேண்டும் என அச்சந்தர்ப்பத்தில் அவர் பின்வருமாறு சவால் விடுத்தார்.

நான் தோற்பேனாயின் எனது கொள்கையை நான் கைவிடுகின்றேன். அரசாங்கம் தோற்குமாயின் அது தமது கொள்கையையும் அரசியலமைப்பையும் தமிழ் மக்கள் ஆதரிக்கின்றனர் எனக் கூறுவதை நிறுத்த வேண்டும்.


செல்வநாயகத்தின் இச் சவால் மேலும் முக்கியம் பெறும் வகையில் தொடரவிருக்கும் நிகழ்வுகளின் எதிர்வுகூறல் போன்று தோன்றியது.

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து முதல் தடவையாக அது சுய நிர்ணய உரிமை கோரும் கொள்கைக்குத் தன்னை மாற்றிக் கொள்ளும் சமிக்ஞையைக் காட்டியது.

இதே சந்தர்ப்பத்தில் செல்வநாயகம் பின்வரும் கனதி மிக்க செய்தியைப் பிரகடனப் படுத்தினார்.

நடந்த நிகழ்வுகளைக் கவனத்தில் கொள்கையில் இலங்கைத் தமிழர் தாம் இலங்கையில் ஓர் அடிமை இனமாக இருப்பதா? அல்லது சுதந்திரமான மக்களாய் வாழ்வதா? என்ற அவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான உரிமை அவர்களுக்கு வழங்கப் படவேண்டும்.

(தொடரும்)



யாழ்.கோப்பாய் மகா வித்தியாலய விசேட கல்விப் பிரிவு மாணவர் களின் ''ஆற்றல்களின் வெளிப்பாடுகள்'' சித்திர ஆக்கக் கண்காட்சி நேற்று முன்தினம் விசேட கல்விப் பிரிவில் பாடசாலை அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. (5)

# கஞ்சிபான இம்ரானை மேலும் தடுத்துவைக்க அனுமதி கோரல்



(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகரான மொஹமட் நஜிம் மொஹமட் இம்ரான் என்ற காஞ்சிபான இம்ரானை மேலும் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்த பாதுகாப்புச் செயலாளரின் அனுமதியைப் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட நிலையில் கஞ்சிபான இம்ரானை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு 90 நாட்கள் வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்று முன்தினத்துடன் நிறைவு பெற்றது.

இந் நிலையில் அவர் நேற்று முன்தினம் நீதிமன்ற மேற்பார்வைக்காக கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நிரஞ்சனா டி சில்வா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். இதன் போதே சி.சி.டி எனப்படும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு இந்த விடயத்தை மன்றுக்கு தெரியப்படுத்தியது.

எனினும் கஞ்சிபான இம்ரானை தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரின் கோரிக்கை தொடர்பில் எதிர்ப்புக்களை முன்வைக்க தமக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரினர்.

அதன்படி மீள மேலும் மூன்று மாதங்கள் கஞ்சிபான இம் ராணை தடுத்து வைப்பதற்கு ஆட்சேபனத்தை முன்வைத்து ஜனாதிபதி சட்டத்தரணி டிரந்த வரலியத்த வாதிடவுள்ளதாக மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இந் நிலையிலேயே அது தொடர்பில் ஆராய்ந்த நீதவான், கஞ்சிபான இம்ரானைத் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவிடம் மீள ஒப்படைத்ததுடன் ஒகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி அவரை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு உத்தரவிட்டார். (இ-7)

# கல்முனை விவகாரம்; 3 மாதகால அவகாசம் கண்கட்டி வித்தை

## வியாழேந்திரன் விசனம்

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு 3 மாதங்கள் கால அவகாசம் கோரப்பட்டுள்ளமை கண்கட்டி வித்தையென நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு 3 மாதங்கள் கால அவகாசம் கோரப்பட்டுள்ளமை கண்கட்டி வித்தையென்றே கூற வேண்டும்.

ஏனெனில் அதற்கு முதல் தேர்தல் நடைபெறும் என்றும் இந்த விடயம் நடக்காதென்றும் அரசாங்கத்திற்கு நன்றாகவே தெரியும்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தும் செயற்பாட்டை சரிவர நிறைவேற்றாத அரசாங்கம் எவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்கப்போகிறது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை, முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக தரமுயர்த்துவது தொடர்பான பிரச்சினைகளை ஒரு மாத காலத்துக்குள் தீர்த்து வைக்க அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1761

### சூர்யகாந்த்

நாம விரும்புற பெண்ணைவிட நம்மள விரும்புற பெண்ணை கட்டிக்கிங்க... இந்த மாதிரி பொண்ணுங்ககிட்டையும் சொல்லுங்கய்யா எந்த பொண்ணும் விரும்பமாட்டேங்குது... பொண்டாட்டி உட்பட



### பத்மா

நேரத்திற்கு தகுந்தாற்போல் மாறும் பச்சோந்தி குணம் கொண்ட உறவுகளோடு ஒட்டியிருப்பதை தன்னம்பிக்கையோடு தனியாக நின்றுவிடலாம்




### அபினவ்

தேடிக்கொண்டேயிருந்து வாழ்க்கையை தொலைப்பதைவிட தேவையானதை மட்டும் தேடி வாழ்க்கையை அனுபவியுங்கள்



### சர்வானந்த்

நல்லவனாய் இரு... ஆனால் அதை நிரூபிக்க முயற்சி செய்யாதே. அதைவிட முட்டாள்தனமான விடயம் எதுவுமில்லை



### பிரக்யா

மீண்டும் கிடைக்காத இனிமையான நாட்கள்



### பூமிகா

உன்னால் உடைத்து எறியப்பட்ட பின்பும் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் இதயத்தை விட அழகானது உலகத்தில் வேறெதுவும் இல்லை!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இனவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளியோம்

## பசில் திட்டவட்டம்

(கொழும்பு)

**எமது அரசாங்கத்தில் இனவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் முஸ்லிம் உலமா கட்சியுடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

அனைத்துப் பிரஜைகளுக்கும் பொதுவான சட்டம் காணப்பட வேண்டும். இனங்களுகிடையில் ஒற்றுமை வலுப்பெற வேண்டுமாயின் அனைவரும் பொதுச் சட்டத்திற்கு கட்டுப்பட வேண்டும். சட்டம் அனைவருக்கும் பொதுவாக காணப்படாத பட்சத்திலே பிரச்சினைகள் தோற்றம் பெறும். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.


எமது அரசாங்கத்தில் இனவாதம் தலைதூக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. கடந்த அரசாங்கத்தில் உள்ளூர் மட்டத்தில் ஏற்பட்ட இனக் கலவரங்களை குறுகிய நேரத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் அளவிற்கு தேசிய பாதுகாப்பு பலமாக காணப்பட்டது.

ஆனால் குண்டுத் தாக்குதல் குறித்த அனைத்துத் தகவல்களும் முழுமையாகக் கிடைக்கப் பெற்றும் இந்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இதற்கு அரசாங்கம் முழுப் பொறுப்பேற்க வேண்டும். இன்று அரசாங்கம் எதிர்த்தரப்பினர் மீது இந்தக் குற்றச்சாட்டை சுமத்துகின்றது.

ஒரு சில முஸ்லிம்கள் தவறான தீர்மானங்களைக் கொண்டு செயற்பட்டமையால் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் குறை சொல்ல முடியாது. தற்போதைய நிலைமையினை அனைவரும் ஒன்றிணைந்தே வெற்றி கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதி - பிரதமர்

# முரண்பாடுகளை தீர்ப்பதற்கான ஒரேவழி ஜனாதிபதித் தேர்தலே



(கொழும்பு)


முரண்பாடுகளுக்காகவும் குறைபாடுகளுக்காகவும் நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும் வகையிலான தீர்மானங்களை எடுக்க முடியாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுவது போன்று 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் குறை பாடுகள் இருக்குமாக இருந்தால் கலந்துரையாடலின் மூலம் தீர்வு காண வேண்டும். கலந்துரையாடல்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி தயாராகவுள்ளதாக அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகள் உள்ளன. நாட்டின் தற்போதுள்ள நிலைமையில் இந்த முரண்பாட்டு நிலை நீடிக்குமாக இருந்தால் தொடர்ந்து நாட்டில் சிக்கல்கள் உருவாகுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

இந்த முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள வேணடும் எனில் உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் அன்றி வேறு ஒருவர் வெற்றி பெறுவாராக இருந்தால் பாராளுமன்றத்தை கலைக்க முழு ஒத்துழைப்பை வழங்குவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மரண தண்டனை தீர்மானமானது பேரழிவைத் தரக்கூடியது

## உலக செல்வந்தர் அச்சம்




மரண தண்டனை பேரழிவைத் தரக்கூடிய அதேவேளை, ஒருபோதும் தீர்வாகாது' என உலகின் பெரும் செல்வந்தர்களில் ஒருவரான Richard Branson தெரிவித்தார்.

சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல்காரர்கள் நால்வருக்கு மரண தண்டனையை நிறைவேற்றும் ஆவணத்தில் தான் கையெழுத்திட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்நிலையிலேயே, Richard Branson தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கையில் மீண்டும் மரண தண்டனையை கொண்டுவர விரும்புகின்றார் என Richard Branson சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ரஷ்யாவிடம் உலங்குவானூர்திகளை கொள்வனவுசெய்ய இலங்கை விருப்பம்

(மொஸ்கோ)

ரஷ்ய தயாரிப்பு உலங்கு வானூர்திகளை இலங்கை கொள்வனவு செய்யும் சாத்தியங்கள் உள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்தார்.

மொஸ்கோவில் நடைபெறும் "இராணுவம்-2019" பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்றுள்ள அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன ரஷ்யாவின் ஸ்புட்னிக் ஊடகத்திடம் கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளுக்காக உலங்குவானூர்திகள் எமக்குத் தேவைப்படுகின்றன.

நாங்கள் தென்சூடான் மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு ஆகியவற்றில் எமது உலங்கு வானூர்திகளை பணிக்கு அமர்த்தியுள்ளோம். எனவே எமக்கு மேலதிக உலங்வானூர்திகள் தேவைப்படுகின்றன.

ரஷ்யாவின் எம்.ஐ.17 மற்றும் எம்.ஐ.2 4 உலங்குவானூர்திகள் மிகச் சிறந்தவை என்பது நன்றாகவே தெரியும். எனவே அவற்றில் மேலும் சிலவற்றை கொள்வனவு செய்ய நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

எவ்வாறாயினும் பெரிய அளவிலான இராணுவ கருவிகளை வாங்குவதற்கு விற்பனையாளரிடமிருந்து நிதி உதவியை உள்ளடக்கிய ஒரு உடன்பாடு குறித்து பேச்சு நடத்த வேண்டும்.



இலங்கை ஒரு சிறிய நாடு. எமது பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு மிகவும் வரையறுக்கப்பட்டது.

மிகப் பெரியளவிலான கொள்வனவுகளில் ஈடுபடும் போது கடன் அடிப்படையிலோ, கொடை அடிப்படையிலோ இதுகுறித்து பேச வேண்டும் " என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வசீம் தாஜுடீன் படுகொலை விவகாரம் அநுரவிற்கு எதிராக குற்றப் பத்திரிகை!

## 20 இலட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதி



(கொழும்பு)

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சாட்சியங்களை வேண்டுமென்றே மறைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விகும் களுஆரச்சி முன்னிலையில் நேற்று வியாழக் கிழமை குறித்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அநுர சேனநாயக்கவை 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன் பிரதிவாதியின் கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைப்பதற்கும் நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டது.

மேலும், பிரதிவாதியின் விரல் அடையாளங்களைப் பெற்றுக் கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் 23 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 130 | 110 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 400 | 400 |
| தக்காளி | 80 | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 140 | 110 | 100 |
| கோவா | 80 | 70 | 60 | 80 |
| கரட் | 160 | 120 | 180 | 200 |
| பூசணி | 120 | 100 | 120 | 120 |
| புடோல் | 80 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 130 | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 120 | 190 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 60 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 120 | 70 | 100 |
| பீற்றூட் | 70 | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 20 | 110 | 130 | 200 |
| முருங்கைக்காய் | 180 | 140 | 130 | 200 |
| போஞ்சி | 160 | 120 | 180 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 70 | 100 |
| கீரை-1பிடி | 20 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 100 | 140 |
| வெங்காயப்பூ | 200 | – | 190 | 240 |
| முள்ளங்கி | 60 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 35 | 20 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 20 | 30 |
| அப்பலா | 100 | – | 110 | 80 |




# கலப்படம்



ராசாராமன் என்னும் வியாபாரி கிளியூர் என்னும் ஊரில் வாழ்ந்து வந்தான். கிளியூர் சிறு ஊர், அங்குள்ள மக்கள் அப்பாவிகள். ஆனால் ராசாராமன் வியாபாரம் செய்வதில் படு புத்திசாலி. எப்பேர்ப்பட்ட சரக்கையும் விற்றுப் பணமாக்கி விடுவான்.

அந்த ஊரில் அவன் கடை மட்டுமே இருப்பதால் அந்த ஊரில் உள்ளவர்களும் வேறு வழியில்லாமல் அவனிடமே பொருளை வாங்குவர். இதனால் எப்படியும் நம்மிடம்தானே வாங்க வருவார்கள் என்ற நம்பிக்கையில் கடையில் பலசரக்குகளில் கலப்படம் செய்து வியாபாரம் செய்வான். இதனால் பலர் உடல் நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில்சிகிச்சை எடுத்துக்கொண்டதும் உண்டு. என்ன செய்வது? அவனைத் தவிர அந்த ஊரில் பணம் போட்டு கடை நடத்த முடியாதே?

ஒரு நாள் பிற்பகல் மூன்று மணி இருக்கும். கடையில் கூட்டமும் இல்லை. ஒரு கார் வந்து கடை ஓரத்தில் வந்து நின்றது. காரில் இருந்து நவநாகரிகமான ஒருவர் இறங்கி கடையை நோக்கி வந்தார்.

ராசாராமன் வருபவர் பெரும் பணக்காரராய் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தான். வந்தவரின் நடை உடை பாவனைகள் அப்படி இருந்தன. இங்க ராசாராமன்னு? அவனிடமே கேட்டார்.

நான்தான் ராசாராமன், நீங்க யாரு? உங்களுக்கு என்ன வேணும்? நான் பக்கத்து டவுனுக்குள்ள "ஹோல் சேல்ஸ் கடை" வைச்சிருக்கேன். எங்க கடையில மொத்த சரக்கை உங்களை மாதிரி ஊருக்குள்ள இருக்கிற சின்னக் கடையில நாங்களே கொண்டு வந்து சப்ளை செய்வோம். அதுக்கான விலையும் உங்களுக்கு வியாபாரம் ஆன தொகையை வாரமோ இல்லை பத்து நாளைக்கு ஒருக்காவோ எங்க ஆட்கள் வந்து வசூல் செய்வார்கள். பக்கத்து ஊரில இதைப் பற்றிப் பேசும்போது உங்களைப் பற்றிச் சொன்னாங்க, அதுதான் உங்களைப் பார்க்க வந்திருக்கேன். நீங்க உங்க பணம் எதுவும் முதல்ல கடையில போட வேணாம். எங்க சரக்கைப் போட்டு வியாபாரம் செய்யுங்கள், உங்களுக்கு விற்றதில இருபது சதவிகிதம் எடுத்துக்குங்க, பாக்கிய நாங்க வாங்கிக்கிறோம்.

இது நல்ல "டீலிங்காகத்தான்" தெரிந்தது ராசாராமனுக்கு. தான் இனிமேல் சொந்தக் காசு போட்டு கொள்முதல் செய்ய வேண்டியதில்லை. சரக்கு அவர்கள் கொண்டு வந்து போட்டு விடுவார்கள். நான் அதனை விற்று இலாபம் பார்த்து விடலாம். அவர்கள் போட்ட சரக்குக்கு 80 சதவிகிதம் கொடுத்தால் போதும். அது போக அவர்கள் கொடுக்கும் சரக்கில் நம் சரக்கையும் கலப்படம் செய்து விட்டால் இன்னும் கொஞ்சம் பணம் அதிகமாகக் கிடைக்கும். மனக்கணக்கு போட்டுப் பார்த்தான்.

வந்தவர் தன் மீசையை மெல்ல வருடியபடி நீங்க நல்லா யோசனை செய்து எனக்குப் போன் பண்ணுங்க. நீங்க போன் பண்ணின பிறகு எங்க ஆட்கள் உங்கள் கடைக்கு சரக்கைக் கொண்டு வந்து இறக்கிடுவாங்க. தனது தொலைபேசி எண்ணை எழுதிக் கொடுத்து விட்டு நான் வரட்டுமா? கிளம்பினார்.

ராசாராமன் ஐயா, இருங்க கோப்பி சாப்பிட்டிட்டுப் போகலாம், இவனே எதிரில் உள்ள டீ கடைக்கு அவரை கூட்டிச் சென்றான். நீங்க என் கூட வந்துட்டா கடையை யார் பாத்துக்குவாங்க? வந்தவர் கேட்டதற்கு இந்த ஊர் மக்கள் ரொம்ப நியாயமானவங்க, நான் வர்ற வரைக்கும் காத்திருந்து சாமான் வாங்கிட்டுப் போவாங்களே தவிர எந்தப் பொருளையும் தொடக்கூட மாட்டாங்க, பெருமையுடன் சொன்னான். (அப்படிப்பட்ட மக்களுக்காகவாவது இவன் நியாயமாய் நடக்கணும் இல்லையா குட்டீஸ்).

ஒரு வாரத்தில் இவன் தன்னுடைய சரக்கை எல்லாம் விற்று பணமாக்கிவிட்டான். அந்த பணத்தை ஒரு இடத்தில் பத்திரப்படுத்தியும் விட்டான். அதன் பின் அவர் சொன்ன தொலைபேசி எண்ணுக்கு போன் செய்தான்.

தான் அவர் கடையில் சரக்கு எடுத்துக்கொள்வதாகவும் அதற்கான பட்டியலை சொல்வதாகவும் தெரிவித்தான். அவர்களும் இவன் கேட்ட அனைத்தையும் எழுதிக்கொண்டு, சரக்கை அனுப்பி வைப்பதாக சொன்னார்கள்.

சொன்னது போலவே மறு நாள் காலையில் ஒரு மாட்டு வண்டியில் இவர் கேட்ட அனைத்து சரக்குகளும் இறக்கப்பட்டன. இறக்கிய பொருட்களுக்கான தொகையும் ஒரு சீட்டில் எழுதப்பட்டு அவரிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டனர். அடுத்த வாரம் வந்து விற்ற அளவுக்கு பணத்தை பெற்றுக்கொள்வதாக சொல்லிசென்றனர்.

இப்படி மூன்று மாதங்களுக்கு வரவு-செலவுகள் நடந்து கொண்டிருந்தன. ஒரு நாள் அன்று வந்தவர் ராசாராமனை பார்க்க வந்தார். ஐயா வாங்க அவரை வரவேற்று உபசரித்தான். அவர் மெதுவாக அவனிடம் வந்து ஐயா உங்க கிட்ட ஒரு இரகசியம் சொல்லணும். இங்க யாரும்இல்லையே என்று கேட்டார்.

ராசாராமன் குனிந்து எதுன்னாலும் சொல்லுங்க ஐயா? இந்த ஊர் ஆளுங்க ரொம்ப நல்லவங்கன்னு சொல்லியிருக்கனே. யாரும் வரமாட்டாங்க,

ஒண்ணுமில்லை எங்கிட்ட கொஞ்சம் பணம் இருக்கு, அதை இங்க வச்சுட்டு போனா பத்திரமா இருக்குமா? இரகசியமாய் கேட்டார். பணம் என்றவுடன் ராசாராமனின் கண்கள் விரிந்தன. சுற்று முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. எடுத்துட்டு வாங்கையா. அவசரமாய் சொன்னான்.

அவர் கார் டிக்கியிலிருந்து ஒரு சூட்கேசை எடுத்து வந்தார். கடையை தாண்டி இருந்த அவன் வீட்டுக்குள் அவரை அழைத்து சென்றவன், கதவை சாத்திக்கொண்டு எவ்வளவு இருக்குங்கையா?

அவர் பெட்டியை திறந்து காட்டினார். இவனுக்கு மூச்சே அடைத்தது போல் இருந்தது. அவ்வளவு பணம் கரன்சியாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

எடுத்து எண்ணிப்பாருங்க, அவர் புன்னகையுடன் சொன்னார். இவனுக்கு அவ்வளவு பணத்தை பார்த்ததில்லை என்றாலும் அதை தொட்டு பார்க்க ஆசை. ஆசைக்காக ஒரு கட்டை எடுத்து படபடவென விரித்துப் பார்த்தான். அதனுடைய மொடமொடப்பு அவனுக்கு ரொம்ப மகிழ்ச்சியாய் இருந்தது.

சரி இது பத்திரமா உங்க கிட்டே இருக்கட்டும். நான் ஆறு மாசம் கழிச்சு வந்து வாங்கிக்கிறேன், அதுக்குள்ள உங்களுக்கு முக்கியமான செலவு ஏதாவது ஏற்பட்டால் தைரியமா இதில இருந்து எடுத்துச் செலவு செய்யுங்க. ஆனா பார்த்துக்குங்க, உங்க கிட்ட நிறையப் பணம் இருக்குதுன்னு தெரிஞ்சா திருடனுங்க புகுந்துடுவானுங்க என்று அவர் சொல்லவும், தன்னை எடுத்து செலவு செய்ய சொல்லி விட்டாரே என்கிற சந்தோசத்தில் தலைகால் புரியாமல் நீங்க கவலைப் படாதீங்க, நான் பாத்துக்கிறேன். அவருக்கு விடை கொடுத்தான். அவர் காரில ஏறப் போனவர் ஏதோ ஞாபகம் வந்தவர் போல் அது இருக்கட்டும், எனக்கு இப்ப கொஞ்சம் பணம் தேவைப்படும், இந்த கரன்சியை எடுத்தா வீணா பிரச்சினைநான் வரும். உங்க கிட்ட பணம் ஏதாவது இருந்தா கொடுங்க.

ராசாராமன் சந்தோசத்தின் உச்சியில் இருந்தான், என்ன இப்படி கேட்டிட்டீங்க, இவ்வளவு பணம் கொடுத்துட்டு உங்களை சும்மா அனுப்ப முடியுமா? இருங்க வர்றேன். வீட்டுக்குள்ளே சென்றவன், தான் கடைச்சரக்கை விற்று வைத்திருந்த பணம் மொத்தத்தையும் எடுத்து வந்தான். ஐயா இதில ஒரு இலட்சம் இருக்கு. என்னோட மொத்தப் பணம், குழைந்து கொண்டே சொன்னான்.

அவர் ராசாராமின் தோளை தட்டிக் கொடுத்து, உங்க உதவியை மறக்க மாட்டேன். நீங்க எவ்வளவு வேண்டுமென்றாலும் எடுத்து செலவு செய்யுங்க. ஆனா பத்திரம். சொன்னவர் அவனிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு காரில் ஏறிச் சென்றார்.

ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அவர் வரவே இல்லை. போன் செய்தாலும் எடுக்கவில்லை. மறுபடியும் சரக்கு எடுக்கவும் வழியில்லை. தான் சரியாகக் கடை விபரங்களைக் கேட்டுக் கொள்ளாததால் சரக்கு எங்கு போய் வாங்குவது என்று திகைத்தான்.


சரி வழக்கம்போல பழைய கடையிலேயே டவுனுக்கு போய் சரக்கு வாங்கி வியாபாரம் செய்யலாம் என்று நினைத்தவன், அந்த சூட்கேசை திறந்து இரண்டு கட்டு பணத்தை எடுத்துக்கொண்டு பக்கத்து ஊருக்குச் சென்றான்.

கடைக்கு சரக்கு வாங்கிய பின், சரக்குக்கு உண்டான தொகையாக இவன் எடுத்து வந்த பணக் கட்டை அவர்களிடம் கொடுத்தான். அவர்கள் அதை மேலும் கீழும் பார்த்து விட்டு, அவனிடம் இந்த பணத்தை எங்க வாங்கினீங்க என்று கேட்டனர்.

இவனுக்கு கொஞ்சம் பயம் வந்தது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு ஒரு பார்ட்டி கொடுத்துச்சு என்றான். அவர்கள் சிரி சிரி என்று சிரித்து நல்லா ஏமாந்திட்டீங்களா? சிரித்தனர். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. நல்லா பாருங்க காண்பித்தனர். அப்பொழுதுதான் கவனித்தான். பணம் ஒரு கட்டு அறுபது ரூபாயாகவும் மற்றொரு கட்டு எழுபது ரூபாயாகவும் இருந்தது..

தான் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்தவன், வேகம் வேகமாக ஊருக்கு வந்து சூட்கேசை திறந்து அதில் உள்ள பணத்தை கொட்டி பார்த்தான். அது எல்லாமே அறுபதாகவும் எழுபதாகவும் இருந்தது. தலையில் கை வைத்து உட்கார்ந்து கொண்டவன், தான் வீட்டில் வைத்திருந்த ஒரு இலட்சம் ரூபாய் அளவுக்கு பணத்தை அவனிடம் கொடுத்தனுப்பியது ஞாபகத்துக்கு வந்தது. குட்டீஸ் கலப்படத்தில் வந்த பணம் கலப்படத்திலேயே போயிற்று பார்த்தீர்களா?

உருவில் உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## விடுகதைகளும் விடைகளும்

• உணவை எடுப்பான், எல்லோருக்கும் கொடுப்பான். ஆனால் தான் மட்டும் உண்ணமாட்டான். அவன் யார்?

அகப்பை

• உதைக்க தெரிந்தவனுக்கு நன்கு உழைக்கவும் தெரியும். அவன் யார்?

கழுதை

• உமிபோல் பூ பூக்கும் சிமிழ்போல் காய் காய்க்கும். அது என்ன?

நெல்லிக்காய்

• உணவு கொடுத்தால் வளருவான். நீர்கொடுத்தால் மாண்டு போவான். அவன் யார்?

நெருப்பு

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தீர்மானம் எடுப்பதை தயவு செய்து தவிருங்கள்

போராட்ட காலங்களில் அறிக்கை விடுகின்ற ஒரு கலாசாரம் நம் மண்ணில் நிலவியது.

அந்த அறிக்கைகள் சம்பிரதாயத்துக்கும் தப்பித்துக் கொள்வதற்குமானதாக இருந்ததேயன்றி, அறிக்கையின் உள்ளாந்தத்துக்கு ஏற்ப அறிக்கையை விட்டவர்கள் நடந்து கொள்ளவில்லை.

ஆக, அறிக்கைக் கலாசாரம் என்பது வெறும் கண்துடைப்பாகவும் ஏமாற்று போக்குடையதாகவுமே இருந்துள்ளது.

இந்த நிலைமை இப்போதில்லை என்றளவில் திருப்தியடையலாமென்றால் இல்லை, தற்போது தீர்மானம் எடுக்கின்ற ஒரு கலாசாரம் நம் மத்தியில் உருவாகியுள்ளது.

அரசியல் கட்சி மாநாடுகளில், வடக்கு மாகாண சபையில், பிரதேச மற்றும் மாநகர சபைகளில் என எங்கும் தீர்மானம் எடுத்து அதனைக் கோவைப்படுத்தி வைப்பதும் பின்னர் கறையான்களுக்கும் எலிகளுக்கும் அவை தீனியாவதுமே அனுபவ முடிவாகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது இந்து சமயப் பேரவை தீர்மானம் நிறைவேற்றுகின்ற கலாசாரத்தை பின்பற்றி தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை ஊடகங்களில் பிரசுரிக்கச் செய்துவிட்டு ஆற்றுப் படுகின்றது.

இங்கு நாம் கூறுவதெல்லாம் இந்து அமைப்புகள் எவையும் தீர்மானம் நிறைவேற்றி அறிக்கைவிட்டு இந்து மக்களை ஏமாற்றக் கூடாது என்பதுதான்.

இந்து சமயத்தைப் பாதுகாக்க நினைத்தால்; அத்துரலிய ரத்ன தேரர் போல உண்ணாவிரதமிருங்கள். அல்லது இந்து மக்களை ஒன்றுதிரட்டி மாபெரும் போராட்டங்களை அகிம்சை வழியில் முன்னெடுங்கள் அல்லது இந்து சமயத்துக்கு எதிராக நடக்கின்ற அட்டூழியங்களைத் தடுக்க உயர்நீதிமன்றத்தை நாடுங்கள்.

இதைவிடுத்து ஏகப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு நீங்கள் உறங்கினால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது யார்?

ஆக, தீர்மானத்தை நிறைவேற்றுவதனூடாக அகிம்சைப் போராட்டத்தை நடத்த வல்லவர்களையும் பின்தள்ளும் செயற்பாட்டை ஒருபோதும் செய்யாதீர்கள்.

எனவே இந்து சமயப் பேரவையிடம் நாம் தாழ்மையாகக் கேட்பது; உங்கள் அமைப்பு இயங்குகிறது எனக் காட்டுவதாக இருந்தால், வடக்கு ஆளுநரின் அலுவலகம் முன்பாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துங்கள்.

அதற்கு எல்லா இந்து அமைப்புகளும் சுழற்சி முறையில் ஆதரவு வழங்குமாறு கோரிக்கை விடுங்கள். உங்களின் போராட்டம் தொடர்பில் ஆளுநர் ஜனாதிபதிக்கு முறையிடுவார். அதனூடு இந்து சமயத்துக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகள் வெளியில் செல்லும்.

கூடவே இந்து சமயத்துக்கு எதிராகச் செயற்படும் பிற சமயம் சார்ந்த மதகுருமாரை பகிரங்கப்படுத்துங்கள். வத்திக்கானுக்குத் தெரியப்படுத்துங்கள்.

இதைவிடுத்து தனித் தீர்மானம் எதையும் நமக்குத் தரப்போவதில்லை.

# இந்து மக்களின் அடையாளங்களை பாதுகாக்க விசேட பொறிமுறை நடவடிக்கை - வேலுகுமார்

(கொழும்பு)

இலங்கையில் வாழும் இந்து மக்களின் பாரம்பரிய உரிமைகள் மற்றும் அடையாளங்களை பாதுகாப்பதற்கு இந்து சமய விவகார அமைச்சு விசேட பொறிமுறையை வகுத்துள்ளதாக இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவிதத்தார்.

அத்துடன், போர் சூழ் நிலையைப் பயன்படுத்தி திட்டமிட்ட அடிப்படையில் அழிக்கப்பட்ட திருத்தலங்களுக்கு புத்துயிர் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உகந்தை ஸ்ரீமுருகன் ஆலயத்திலிருந்து கதிர்காம யாத்திரைக்கான பாதை திறப்பு விழா அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் வேலுகுமார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உட்பட மேலும் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் வேலுகுமார் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர்,

“இலங்கையில் உள்நாட்டுப் போரின்போதும் இந்து மதத்துக்கு எதிராக சிலர் போர் தொடுத்தனர். போர் முடிவடைந்த சூழ் நிலையிலும் அதை அவர்கள் கைவிட்டதாக தெரியவில்லை.

கடந்த காலங்களில் இந்துக்களின் பாரம்பரிய அடையாளச் சின்னங்கள் அழிக்கப்பட்டன. திருத்தலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. திட்டமிட்ட அடிப்படையில் புதிது புதிதாக கட்டடங்கள் முளைத்தன.

இவ்வாறு அழிக்கப்பட்ட, இருட்டடிப்பு செய்யப்பட்ட இந்துக்களின் அடையாளங்களுக்கு அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் நாம் புத்துயிர் கொடுத்து வருகின்றோம்.

இப்பணிகளை எதிர்காலத்தில் மேலும் விரிவுபடுத்துவோம். இதற்காக விசேட பொறிமுறையொன்று நிறுவப்படும்” என மேலும் தெரிவித்துள்ளார். (7)

# மேற்கத்தேய நாடுகளின் தேவையை நிறைவேற்றுவதே பாக்கியசோதியின் பிரதான நோக்கம்- விமல் வீரவன்ச

மேற்கத்தேய நாடுகளின் தேவைகேற்றவகையில பொலிஸாரை இயககுவதற்கே பாககியசோதி சரவணமுதது போன்றவர்கள் முயற்சித்து வருகின்றனர். அதற்காகவே இந்த அரசாங்கத்தை அதிகாரத்துக்கு கொண்டுவர இவர்கள் பாடுபட்டனர என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல்வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சநதிப்பில கலநதுகொணட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அஸகிரிய மகாநாயகக தேரர இனவாததததை தூணடும் வகையில் செயற்பட்டுள்ளதாக தெரிவித்து அரசசார்பற்ற நிறுவனங்களில் முகவராக செயற்படும் பாக்கியசோதி சரவணமுத்து பொலிஸில் முறைப்பாடு ஒன்றை தெரவித்திருக்கின்றார்.

ஆனால கடந்த காலங்களில் இந்த நாட்டில் சிங்கள பௌத்தர்களை கோபமூட்டும் வகையில் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் போன்றவர்கள் செயற்பட்டு வந்திருக்கின்றனர்.

ஆனால் பயங்கரவாத தாக்குதலுக்கு எதிராகவும் அதில் மரணமடைந்த, காயமுற்றவர்களுக்கு எதிராக குரல் கொடுக்காதவர்களே இன்று அஸ்கிரிய மகாநாயக்க தேரரின் கூற்றொன்றை பிடித்துக்கொண்டு திரிகின்றனர். அத்துடன் இவர்கள் தேரர்களுக்கு எதிராக செயற்பட சிறிய விடயமொன்றேனும் கிடைத்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவார்களே தவிர, பிற மதத்தவர்களுக்கு எதிராக ஏற்படும் அநீதிக்கு எதிராக குரல்கொடுப்பவர்கள் அல்ல.

அத்துடன் அஸ்கிரிய மகாநாயக்க தேரருக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாடும் பிழையாகவே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது வைத்தியர் சாபியின் நடவடிக்கைக்கு, அவரை கல்லெறிந்து கொலை செய்ய வேண்டும் என அதிகமானவர்கள் தெரிவிக்கின்றனர் என்றே தேரர் தெரிவித்துள்ளார். அந்த கருத்தை மகாநாயக்க தேரர் தெரிவித்ததாகவே முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் மகாநாயக்க தேரர் அவ்வாறு தெரிவித்திருந்தாலும் எமது நாட்டில் அவ்வாறு தண்டனை வழங்கப்படுவதில்லை. இஸ்லாமிய நாட்டிலே இந்த தண்டனை வழங்கப்படுகின்றது. இங்கு ஷரிஆ சட்டம் இருந்தால் தான் கல்லெறிந்து கொலை செய்யும் தண்டனை வழங்கலாம். வைத்தியர் சாபியின் தவறின் பாரதூரத்தை காட்டவே அவ்வாறு தெரிவித்திருக்க வேண்டும். மாறாக உண்மையில் கல்லெறிந்து கொலை செய்வதல்ல.

எனவே மேற்கத்திய நாடுகளின் தேவைக்கேற்ற வகையில் பொலிஸாரை இயக்குவதற்கே பாக்கியசோதி சரவணமுத்து போன்றவர்கள் முயற்சித்து வருகின்றனர். அதற்காகவே இந்த அரசாங்கத்தை அதிகாரத்துக்கு கொண்டுவர இவர்கள் பாடுபட்டனர் என்றார்.(இ-7)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### எளிமை

மிகையற்ற எளிமை என்பது வறுமை என்றும் தன் தேவைகளை மறுத்தல் என்றும் தவறாகக் கருதப்படுகிறது. அது இவையிரண்டுமேயில்லை. எளிமை முழு வளர்ச்சியடைநத (பககுவமுறற) மனநிலையிலிருநது வருகிறது. இது சமூக நலத்தின் அடையாளம்.

பெரும்பாலும் எளிமையைக் கடைப்பிடிப்பவர்கள் செல்வச் செழிப்பைக் கண்டு மிகக் கோபம் கொள்கிறார்கள். இது மிகப் பரிதாபமான நிலை. அததகைய எளிமை முழு வளர்ச்சியடைந்த மனதிலிருந்து வருவதில்லை. ஆனால் நிர்ப்பந்தத்தினால் (கட்டாயப்படுத்தலினால்) வருகிறது. உண்மையான எளிமை செல்வச் செழிப்பைக் கண்டு சகிப்புத் தனமையுடையதாகவும ஒருபோதும அதைககணடு கோபம் கொள்ளாததாகவும் இருக்கும்.

உண்மையில் பக்குவப்பட்ட மனநிலையுடையவர்கள் எளிமையாகயில்லாமல் இருப்பவரைக் கண்டு பரிதாபம் கொள்வர். எளிமை என்பது கொண்டாட்டத்திற்கு எதிரானது அல்ல, பகட்டு மட்டுமே கொண்டாட்டமில்லை. கொண்டாட்டம் ஆன்மாவிலிருந்து பிறக்கிறது. யாரொருவர் ஆன்மவளம் உடையவராயிருக்கிறாரோ அவரால் மட்டுமே எளிமையை நடைமுறையில் பயிலமுடியும். ஒருவர் பொருட்செல்வம் படைத்தவராக இருக்கலாம். ஆனால் ஆன்மவளம இல்லாதவராக இருநதால அவரால கொணடாடவோ, படிப்படியாக வளர்ச்சியடையவோ முடியாது.

பகட்டு என்பது ஆன்மாவின் வறுமை. பகட்டினால் வரும் செருக்கிலிருந்து (இறுமாப்பிலிருந்து) விடுதலையைத் தருகிறது எளிமை. ஆனால எளிமையில செருககு கொள்வதும் பகட்டுதான்.

எளிமை பெருவளத்திலிருந்து வருகிறது. எளிமை பெரும் வளத்தைத் தருகிறது. நீ உனது வாழ்வில் எங்காவது குறையை உணர்ந்தால் உடனே எளிமையைக் கடைப்பிடி. எளிமை சுதந்திரத்தை மாத்திரம் கொண்டுவருவதல்லாமல் இருப்பதை மற்றவரோடு பகிர்ந்து கொள்வதையும் மற்றவருடைய நலனில் அக்கறை கொள்வதையும் போற்றி வளர்க்கிறது.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### எந்தெந்த சாபங்களினால் என்னென்ன பாவங்கள் ஏற்படும்?

**தேவ சாபம**

தெய்வங்களின் பூஜையைப் பாதியில் நிறுத்துவது, தெய்வங்களை இகழ்வது போன்ற காரணங்களால், தேவ சாபம் ஏற்படும். தேவ சாபத்தால் உறவினர்கள் பிரிந்துவிடுவர்.

**சர்ப்ப சாபம்**

பாம்புகளை கொல்வதாலும், அவற்றின் இருப்பிடங்களை அழிப்பதாலும், சர்ப்ப சாபம் உண்டாகும். இதனால, கால-சரபப தோஷமும ஏறபடடு திருமணத தடை ஏற்படும் என்கிறார்கள்.

**பித்ரு சாபம்**

முன்னோர்களுக்கு செய்யவேண்டிய திதி மற்றும் தரம காரியங்களை செயயாமல மறபபதும, தாய-தநதை தாத்தா-பாட்டி போன்றோரை உதாசீனப்படுத்துவதும், அவர்களை ஒதுக்கி வைப்பதும், பித்ரு சாபத்தை ஏற்படுத்தும். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில நீர்வேலி கந்தசாமி கோவில் பிரதேசம், உசன், விடத்தற்பளை, கெற்பெலி, நந்தாவில், கொக்குவில், ஞானபண்டிதா பாடசாலை, பிரம்படி, மாவடி, மருத்துவபீட பிரதேசம், மருத்துவபீட அரங்கம், செல்வமகால், பூநாறிமடத்தடி, சிவப்பிரகாசம் வீதி, கோம்பையன்மணல், இலங்கை வங்கி பிரதேசம் சுன்னாகம், மயிலிட்டி ஒரு பகுதி, சாங்கானை, பண்டத்தரிப்பு, விளிசிட்டி, தொல்புரம், சுழிபுரம், கள்ளவேம்படி, வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை, விளான், பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம், மாதகல், காஞ்சிபுரம், ஜம்பு கோளப்பட்டினம், குமாந்துறை, காட்டுப்புலம், மாவடி, காளிகோவிலடி, மூளாய், K.M.K. கடலுணவு பீறைவேற் லிமிற்றற், கருநாவல்துறை, அராலி, காங்கை தீவு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கிளாலி, கனகபுரம், உருத்திரபுரம், ஜெயந்தி நகர், செல்வா நகர், உருத்திரபுரம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வதிரி அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பம்பைமடு, பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில பெரியகாடு, ஆண்டியாப்புளியங்குளம் மனிக்பாம், மீடியா பாம், கிறிஸ்தவபுரம், கதிர்காமநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# அச்சுவேலி ரொக்கட் மென்பந்தாட்ட தொடர் அடுத்த சுற்றுக்கு வல்வை அணி தெரிவு

அச்சுவேலி ரொக்கட் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் 10 ஓவர் கொண்ட போட்டியில் வல்வை அணியானது தனது முதலாவது ஆட்டத்தில் ஆவரங்கால் ரைகேர்ஸ் அணியினை எதிர்கொண்டது. அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய வல்வை அணியானது நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர் நிறைவில் 107 ஓட்டங்க்ளைப் பெற்றுக்கொண்டது. வல்வை அணி சார்பாக கபிலன் அதிரடியாக 7 ஆறு ஓட்டம் மற்றும் 2 நான்கு ஓட்டம் அடங்கலாக 60 ஓட்டங்களைப்பெற்றுக் கொடுத்தார். பதிலுக்கு துடுப்



பெடுத்தாடிய ஆவரங்கால் ரைகேர்ஸ் அணியானது 67 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 40 ஓட்டங்களினால் தோல்வியினை தழுவியது. வல்வை அணிசார்பாக பந்து வீச்சில் ரவி அதிகபட்சமாக 4 இலக்குகளைப் கைப்பற்றினார். (க)

# மீண்டும் தொடங்கியது மென்பந்தாட்ட அரசன் தொடர்

மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் சுதந்திரராஜா செல்வராணி ஞாபகார்த்மாக அவரது புதல்வர்கள் கண்ணன், சுரேனின் அனுசரணையுடன் சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மென்பந்தாட்ட தொடர் கிளிநொச்சி, முல்லைத தீவு, வவுனியா, மன்னார், வடமராட்சி கிழக்கு (யாழ்.மாவட்டம்), வடமராட்சி மற்றும் தென்மராட்சி இணை (யாழ்.மாவட்டம்), வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் இணை (யாழ்.மாவட்டம்), தீவகம் (யாழ்.மாவட்டம்) ஆகிய 8 இடங்களில் தலா 2 அணிகள் வீதம் 16 அணிகள் சைனிங்ஸ் இன் "வடக்கின் மென்பந்தாட்ட அரசன்" தொடரின் லீக் சுற்றுக்கு தகுதிச்சுற்றுப்போட்டிகள் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் தீவக மண்ணில் ஆரம்பமாக இருக்கின்றது. (க)

# துடுப்பாட்டப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

வடமராட்சி முகாமைத்துவ மற்றும் வணிக பீட மாணவ ஒன்றியத்தினால் யாழ்.மாவட்ட ரீதியில் கழகங்களுக்கிடையிலான அணிக்கு 8 வீரர்கள் 6 பந்து பரிமாற்றம் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் புதிய கொலின்ஸ் வி.க.மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் அனைத்தும் சர்வதேச விதிமுறைப்படி நடத்தப்படுவதுடன் வெற்றி பெறும் அணிக்கு பெறுமதி மிக்க வெற்றிக்கிண்ணம் வழங்கப்படும். போட்டியில் பாங்குபற்ற விரும்பும் அணிகள் (077 929 8162), (077 325 9468), (077 941 3097), எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)



2019 ஆம் ஆண்டிற்கான கிளிநொச்சி மாவட்ட மட்ட DSI கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி விவேகானந்த வித்தியாலய கரப்பந்தாட்ட போட்டியில் 13 வயது பெண்கள் பிரிவு மற்றும் 15 வயது ஆண்கள் பிரிவு முதலாமிடத்தையும் 13 வயது ஆண்கள் பிரிவு இரண்டாமிடத்தையும் 17 வயது ஆண்கள் பிரிவு மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். (க)



மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. இப்போட்டியில் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட அணி சம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளது. (க)

# விராட்டின் சாதனையை முறியடித்த பாபர்



அதிவேகத்தில் மூவாயிரம் ஓட்டங்களை கடந்தவர்கள் பட்டியலில் பாகிஸ்தான் அணியின் பாபர் ஆசம், இந்திய அணியின் தலைவர் விராட்ஹோலியை பின்னுக்குத் தள்ளி சாதனை படைத்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கெதிரான நேற்று நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடிய பாகிஸ்தான் அணியின் பாபர் ஆசம், 121 பந்துகளில் 101 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இதன்மூலம் உலகக்கிண்ணம் அரங்கில், சுமார் 32 ஆண்டுகளுக்கு பின் சதம் விளாசிய துவக்க வீரர் அல்லாத முதல் பாகிஸ்தான் வீரர் என்ற பெருமை 24 வயதான பாபர் ஆசம் பெற்றார்.

அதோடு மட்டுமில்லாமல் நேற்று 29 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஒரு நாள் போட்டியில் 3 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து அசத்தினார்.

இதன்மூலம் 75 இன்னிங்சில் மூவாயிரம் ஓட்டங்களை கடந்து இரண்டாவது இடத்தில் இருந்த விராட்ஹோலியின் சாதனையை முறியடித்தார். (க)

# பன்றி என்றவருக்கு பதில் கொடுத்த அகமது

பொதுவெளியில் குண்டு பன்றி என அழைத்த ரசிகருக்கு பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பார்ஸ் அகமது பதிலடி கொடுத்துள்ளார். இந்நிலையில், இங்கிலாந்திலுள்ள மால் ஒன்றில் குழந்தையுடன் சென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பார்ஸ் அகமதை அழைத்த ரசிகர் ஒருவர், குண்டு பன்றி போல் இருக்கிறார் என தரக்குறைவாகப் பேசி அதை வீடியோ எடுத்து இணையத்தில் வெளியிட்டார். குறித்த வீடியோ இணையத்தில் வைரலானது.

இச்சம்பவம் குறித்து பேசிய சர்பார்ஸ் அகமது, இதுகுறித்து பேச ஒன்றுமில்லை. எங்களை குறித்து மக்கள் பேசுவதை கட்டுப்படுத்துவது எங்கள் கையில் இல்லை. வெற்றியோ, தோல்வியோ இரண்டுமே விளையாட்டின் ஒரு பகுதியாகும். இதற்கு கவலை கொள்ளக் கூடாது என்றார். (க)

## கிளிநொச்சியில்...

வட்டக்கச்சி செல்லும் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையில் வந்த ரக்ருடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் கோவிந்தன் கடை சந்தி மருதநகர் பகுதியை சேர்ந்த செல்லையா பிரபாகரன் என்பவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய நபரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-312)

## வாக்கெடுப்பின்றி...

ஒரு மாதத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. இதையடுத்து, அவசரகால சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான பிரேரணை வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அவசரகால நிலைமையை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை கடந்த 22ஆம் திகதி ஜனாதிபதி வெளியிட்டிருந்தார்.

ஈஸ்டர் ஞாயிறு அன்று நாட்டின் சில இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களை தொடர்ந்து ஏப்ரல் 22ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இதன் பின்னர் மே 22 இல் முதல் தடவையாகவும் ஜுன் 22 இல் இரண்டாம் தடவையாகவும் இரு தடவைகள் அவசர கால சட்டம் நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கணவனின்...

பெற்ற இந்தச் சம்பவத்தில் கணவரால் 12 இடங்களில் கத்திக்குத்துக்கு இலக்கான மனைவி, அயலவர்களின் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கணவன் மனைவியுடன் தினமும் தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்த தகராறு நேற்று அதிகரித்த நிலையிலேயே மனைவியின் வயிற்றில் கத்தியால் குத்தியுள்ளார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில், கத்திக்குத்து சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-9,101,106)

## உரிமைகளை...

வரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திருகோணமலையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கில் தற்போதைய அரசாங்கத்தினால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு நன்றி தெரிவித்த இரா.சம்பந்தன், அபிவிருத்தியின் பெயரில் உரிமைகளை விட்டுக்கொடுக்க நாம் ஒருபோதும் தயாராக இல்லை என தெரிவித்தார்.

உரிமைகளுக்கே முன்னுரிமை கிடைக்க வேண்டும் என தெரிவித்த இரா.சம்பந்தன், அதன் அடிப்படையில் அபிவிருத்தி கிடைக்கப் பெற்றால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்றும் அவர் கூறினார். (ம-3)

## புதையல் தோண்...

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த இடத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

அப்போது சட்டவிரோதமாக புதையல் தோண்ட முற்பட்டதாக தெரிவித்து சம்பவ இடத்தில் காணி உரிமையாளர், ஒரு பெண் உட்பட 14 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து நிலத்திலிருந்து பொருட்களைக் கண்டறியும் கருவி மற்றும் கமரா, மடிக்கணனி உள்ளிட்ட பெருமளவான பொருட்களைக் கைப்பற்றியதுடன், இவர்கள் பயணித்ததாகச் சந்தேகிக்கப்படும் மூன்று கார்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மாத்தறை, தம்புள்ள, கலேவெல, திருகோணமலை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என கண்டறியப்பட்டதுடன், விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9,281,315)

## ஐ.எஸ். பயங்கர...

துள்ளனர்.

ஒல்லிகுளத்தில் நேற்று மாலை வெடி பொருட்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சவுதி அரேபியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட மில்ஹான் வழங்கிய தகவல்களுக்கு அமைய குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவ இடத்திற்கு மில்ஹான் குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

இதன்படி 300 ஜெலக்நைட் குச்சிகள் மற்றும் 1000 டெட்டனேட்டர்கள் என்பன மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காத்தான்குடியில் தேசிய தௌஹீத் ஜமாத்தின் ஆயுதப்பிரிவு தலைவராக மொஹமட் மிலான் என்ற பயங்கரவாதி செயற்பட்டதாக குற்ற புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

## தென்னாபிரிக்க...

ரணதுங்க உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

இதனையடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கும் இடையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் குறுகிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, விமானத்துக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொண்டு, நண்பகல் 12 மணியளவில், தென்னாபிரிக்க ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர், ஜப்பான் நோக்கி பயணித்தனர். (ம)

## பாலியல் அடிமை...

கனடா பிரஜையான றோய் சமாதானம் என்பவர் கோத்தபாயவினால் தான் அனுபவித்த சித்திரவதைகளுக்கு எதிராக கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்க நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்த நிலையிலேயே தற்போது மேலும் 10 பேர் குறித்த வழக்கில் கோத்தபாயவிற்கு எதிராக இணைக்கப்பட்டுள்ளனர்.

ஜஸ்மின் சூக்காவை தலைமையாகக் கொண்ட சர்வதேச உண்மை மற்றும் நீதிக்குமான செயல்திட்ட அமைப்பு (ITJP), பாதிக்கப்பட்டவர்களை நீதிமன்ற நடவடிக்கைகளில் பிரதிநிதித்துவம் செய்யும் சட்ட நிறுவனமான கோஸ்பீல்ட் உடன் இணைந்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளது.

இந்நிலையில், மேற்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களில் அப்போதைய பாதுகாப்பு செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட இராணுவ முகாம்கள் பொலிஸ் நிலையங்களில் அவர்கள் அனுபவித்த சித்திரவதைகளை முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளது.

சூடாக்கப்பட்ட இரும்புக்கம்பிகளால் தாக்கினார்கள், கேபிள்களால் அடித்தார்கள், பெற்றோல் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பைகளால் முகத்தை மூடி மூச்சுதிணறச் செய்தார்கள் என தமது பெயரை குறிப்பிடவிரும்பாத அவர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதியாக பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ ஆள்கடத்தல், சித்திரவதைகள் பாலியல் வல்லுறவு மற்றும் கப்பம் பெறுதல் ஆகியவற்றில் ஈடுபட்ட படையினரிற்கு பொறுப்பாகயிருந்தார் என அவர்கள் தங்கள் மனுவில் தெரிவித்துள்ளனர்.

இந்த துஷ்பிரயோகங்கள் இடம்பெற்ற காலத்தில் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்க பிரஜையென்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தங்களை சித்திரவதை செய்தவர்கள் யார் என்பதையும் நேரடியாக குறிப்பிட்டுள்ள பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையின் முக்கிய விசாரணை அதிகாரியான நிசாந்த டி சில்வா இரு தடவைகள் தங்களை கொழும்பில் தாக்கினார் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

நிசாந்த டி சில்வா என்னை தலைகீழாக தொங்கவிட்டு தாக்கினார் என பாதிக்கப்பட்ட ஒருவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் டீ.ஐ.டி.யின் கொழும்பிற்கான பொறுப்பதிகாரியாக காணப்பட்ட பிரசன்ன டி அல்விஸ் என்பவரிற்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்களை வழக்கு தாக்கல் செய்தவர்கள் சுமத்தியுள்ளனர்.

அவர் சித்திரவதைகளிற்கு உத்தரவிட்டதுடன் சில வேளைகளில் நேரடியாக அதில் ஈடுபட்டார். அவருக்கு கோத்தபாய ராஜபக்ஷ விடமிருந்து நேரடி உத்தரவுகள் கிடைத்தன என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## 18 வயது யுவதி...

மற்றும் 72 வயதான உறவினர் ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யுவதியினை மோட்டார் சைக்கிளில் ஏற்றி கடத்திச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## பாராளுமன்ற...


எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூவரும் அழைக்கப்பட்டு, சாட்சியங்கள் பெறப்பட வேண்டும் என்றும் கூறினார். அத்துடன் தாக்குதல்கள் தொடர்பில் அறிந்திருந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களிடம் கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பத்தரமுல்லையிலுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேபோன்று பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதியிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் மீது எவ்வித குற்றமும் இல்லை என்றால், தாக்குதல்களுக்கு அவர் பொறுப்புக்கூறத் தேவையில்லை என்றால் தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளிப்பதற்கு அவர் அச்சமடையத் தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, தெரிவுக்குழு குறித்து ஜனாதிபதி முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்களிலிருந்தும், தெரிவுக்குழுவில் முன்னிலையாகுவதற்கு அவர் தயங்குவதிலிருந்தும் தாக்குதல்கள் தொடர்பான குற்றவாளி தான் என்பதை ஜனாதிபதியின் மனசாட்சி அறிந்திருப்பது தெளிவாகிறது என்றும் அநுரகுமார குறிப்பிட்டார். அத்துடன் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கும் இந்த அரசு தயாராகி வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

# சங்கீத பூஷணம் முத்துக்குமாரசாமி காலமானார்



(கொழும்பு)

சங்கீதபூஷணம் முத்துக்குமாரசாமி சர்மா அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார்.

குழந்தை பருவத்திலிருந்தே பாடி நடித்து பெயர் பெற்ற இவர் இலங்கை வானொலியில் எண்ணற்ற நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். (ம)

திட்டமிட்ட வகையில்

# தமிழர்கள் மீது இராணுவ கெடுபிடி

### சபையில் சிறீதரன்

வடக்கு கிழக்கில் வாழுகின்ற தமிழர்கள் மீது திட்டமிட்ட வகையிலே இராணுவக் கெடுபிடிகளும் இராணுவ நடவடிக்கைகளும் அதிகரித்த வண்ணம் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.

இவை இந்த நாட்டிலே ஒரு மிக பயங்கரமான ஒரு அடக்குமுறைக்கு வித்திடுகின்ற செயல்பாட்டை தொடர்ந்தும் இராணுவம் செய்கிறது என்பதை வெளிப்படையாக காட்டிநிற்கிறது எனவும் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதம் இடம்பெற்றுள்ளது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர், வடக்கில் இருக்கின்ற எல்லா பாடசாலைகளிலுமே இராணுவம் இந்த சோதனைகளில் ஈடுபடுகிறது. இதனை விட இராணுவத்தினர் பாடசாலைகளுக்குள்ளேயே இருக்கின்றார்கள்.

இராணுவ பிரசன்னத்தோடு தான் மாணவர்கள் பாடசாலை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய தேவைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இது ஒரு திட்டமிட்ட வெளிப்படையான இராணுவ நடவடிக்கை. வெளிப்படையாகவே ஒரு இராணுவ ஆட்சிக்குள் வடக்கையும் கிழக்கையும் வைத்திருக்க அரசாங்கம் முயலுகிறது என்பதை இது தெளிவாக காட்டுகின்றது எனவும் தெரிவித்துள்ளார். (ம)

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1549 திகதி 2019/06/27
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 13 20 61 70
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.06.27
சீட்டிழுப்பு இலக்கம் 2161
ஆங்கில எழுத்து E வெல்லப்பட்ட இலக்கங்கள் 05 39 40 46
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 27/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 0564
லக்னம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 24 28 31 38
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/06/27
சீட்டிழுப்பு இலக்கம் 3947
ஆங்கில எழுத்து N வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 7 8 4 0 7
தேசிய லொத்தர் சபை

# சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் மீறியுள்ளது

## ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

இலங்கை ஏதோ ஒரு விதத்தில் மரண தண்டனை நிறைவேற்றினால், அது கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் 73வது பொதுச் சபைக் கூட்டத்தில் வழங்கிய வாக்குறுதியை மீறும் செயல் என ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் மரண தண்டனை வழங்கப்படுவதை தெளிவாகவும் எந்த சந்தேகமும் இன்றி எதிர்க்கின்றது.

இலங்கை மரண தண்டனையை நிறைவேற்றினால், அது சர்வதேச சமூகம், முதலீட்டாளர்கள் மற்றும் நாட்டினருக்கு தவறான செய்தியை கொண்டு சேர்க்கும் என ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் அதன் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை என்பது கொடூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் அவமதிக்கத்தக்க தண்டனை. போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றங்களை ஒழிக்க மரண தண்டனை அமுல்படுத்துவதாக இலங்கை அரசு கூறினாலும், மரண தண்டனையை நிறைவேற்றுவதன் மூலம் அந்த குற்றங்களை தடுக்க முடியாது என்பது பல ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை வழங்கியுள்ளது. அத்துடன் சர்வதேச பொது மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான இணக்கப்பாடுகள் உட்பட 27 இணக்கப்பாடுகளை இலங்கை வெற்றிகரமாக மற்றும் பலன்தரக் கூடிய வகையில் செயற்படுத்துகிறதா என்பதை ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

இலங்கையின் உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை நெகிழ்வு தன்மை, ஜனநாயகம் மற்றும் சகல தரப்பினரின் பங்கேற்புடன் கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவதில் பெரிய முன்னேற்றத்தை அடைந்தது.

இந்த வெற்றியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று, சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை நிறைவேற்றும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (ம)


# அஸ்கிரிய மகாநாயக்க தேரரின் கருத்தை முற்றாக நிராகரிக்கின்றேன்

## திபெத்திய பௌத்த ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்கள் தொடர்பில் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வரக்காகொட ஞானரத்தன தேரர் தெரிவித்த கருத்தைத் தான் முற்றாக நிராகரிப்பதாக திபெத்திய பௌத்த ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, நான் ஒரு பௌத்தன். பௌத்த



மதத்தின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. எனினும், நான் ஏனைய அனைத்து சம்பிரதாயங்களையும் மதிக்கின்றேன்.

முஸ்லிம்களின் வியாபாரங்களைப் புறக்கணிக்க வேண்டும் எனவும், முஸ்லிம்கள் மீது கல்லெறிந்து கொலைசெய்ய வேண்டும் எனவும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் தெரிவித்த கருத்தை முற்றாக நிராகரிக்கின்றேன்.

மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக முழுமூச்சுடன் செயற்பட வேண்டிய ஒருவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது பாரிய தவறாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

# சுபீட்சம்மிக்க நாட்டை கட்டியெழுப்ப போதை ஒழிப்பு அவசியமாகும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் மத்தியில் வறுமை நிலை உயர்வடைவதற்கு போதைப் பொருள் பாவனையே முதன்மை காரணியாக காணப்படுவதுடன், சுபீட்சம்மிக்க நாட்டை கட்டியெழுப்புவதற்கு போதைப்பொருளுக்கு எதிரான செயற்பாடுகள் மிகவும் அவசியமாகும் எனவும் அதற்கான நடவடிக்கைகளை தான் முன்னெ

பொலன்னறுவை பெந்திவெவ மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரண்டு மாடி வகுப்பறைக் கட்டிடத்தொகுதியை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார். எழுச்சிபெறும் பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தி



டுத்து வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

செயற்திட்டத்தின் கீழ் பொலன்னறுவையிலுள்ள நான்கு பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வகுப்பறைக் கட்டிடத்தொகுதிகளை ஜனாதிபதி நேற்று மாணவர்களிடம் கையளித்ததுடன், இவற்றுக்கான மனிதவலு பங்களிப்பு இலங்கை இராணுவத்தினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சகல வசதிகளையும் கொண்டதாக பெந்திவெவ மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டிடத் தொகுதிக்காக 175 இலட்ச ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை மாணவர்கள் மிகுந்த அன்புடன் வரவேற்றதுடன், நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து வகுப்பறைக் கட்டிடத்தை மாணவர்களிடம் கையளித்த ஜனாதிபதி மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளையும் பார்வையிட்டார். (ம)

துரித தபால்கள் பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528
(9192)


நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
அருள் | இல.1, பெற்றோல் செற் லேன், நெல்லியடி.
076 443 1576
(C-6615)

British College of Higher Studies
BCHS
பெற்றோர்களே! மாணவர்களே,
ஆங்கிலத்தில் புலமை பெற மிகச்சிறந்த வாய்ப்பு
DIPLOMA IN ENGLISH (6 MONTHS COURSE)
தொழில்புரிவோர், பல்கலைக்கழகம் செல்வோர், பரீட்சை எழுதுவோருக்கும் மிகச்சிறந்த பாடநெறி
வார நாட்கள், அடிப்படையிலிருந்து...
~~25,000~~ JUST 17,000
முதல் 20 பேருக்கு, ADMISSION FEE FREE
வாரம் 08 மணித்தியாலம்
01.07.2019 முதல்.... புதிய பிரிவுகள்.
Call: 021 222 4550/ 077 703 3039
Sirambi yadi lane, Off Stanley road, Jaffna
(C-6794)

Techno World
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்ப்பாணம்)
A/L 2021
தொழில்நுட்பப் பிரிவு
மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா...
கண்டி நுவரெலியா
(ஆராய்ச்சி நிலையம், பண்ணை, Tissue Culture Lab பார்வையிடப்படும்.)
தொடர்புகளுக்கு : 077 017 5844, 077 170 8549

NVQ
#ICT #CAA
Full Time and Part time
(C-6796)
தகவல் தொழில்நுட்பத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட அரச சான்றிதழ்களை DMI ஊடாக பெற்றுக் கொள்ளுங்கள்.
புதிய பிரிவு ஆரம்பம் 1/7/2019-(Mon)
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (பெயின்ஸ் ஹோல் அருகாமை)
021 222 4403 / 0777173517 / 0777240707

கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின் | வர்த்தக கையியக்க மெசின் | வர்த்தகரீதியின் (Automatic) இடியப்ப மெசின்
(8716)
தொடர்புகளுக்கு : 076 796 6000, 077 968 1118 (இலங்கை)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca
இல் 4164336006 இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (டொரன்ரோ, கனடா)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(C-6534)
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி, ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.